203

ஜகன் மோகினி

ஏவிளம்பி ௵ சித்திரை ௴ 1—5—57 25 நயா பைசா

நக்ஷத்ர மண்டலம்

பி. தனம்
பேசுகிறார்.

மலர் 4 இதழ் 5.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUL 1957
MADRAS
203/3-57

3L
ஊ2K, N223
M 57345
183208

ஜகன்மோகினி

ஐயு[redacted]ப்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

மே 1957. மலர் 34, இதழ் 5. ஏவிளம்பி ௵ சித்திரை மீ

பொருளடக்கம்

	பக்கம்
இனியாவது விமோசன முண்டா? —V.K. பார்த்தசாரதி ஐயங்கார்	1
பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி	5
எங்களது இன்பச்செலவு —T. S. ராஜகோபாலன்	9
காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி	14
ஹிந்து சட்ட மாறுதல்கள் —P.M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்	17
சப்பாணி எழுத்தாளன் —வை.மு. பத்மினிஸ்ரீநிவாஸன்	21
நக்ஷத்ரமண்டலம் தனம் பேசுகிறார் —சாரக்ராகி	25
வை.மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் —வை.மு. விஜயலக்ஷ்மி	193-208
வாழ்க்கையில் ஒரு குறிப்பு —S. N. கிரிஜா (ராப்பர் 2-ம் பக்கம்)	

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

[நான் எழுதியிருந்ததை சென்ற இதழில் பிரசுரித்தது பற்றி சந்தோஷம். சமீபத்தில் நடந்த இந்த விசித்திரத்தை, அதன் முக்கிய கர்த்தாவே என்னிடம் கூறியபடியே எழுதி இருக்கிறேன் பிரசுரிப்பீர்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.]

ஆஸ்பத்திரியில் இருக்கும் நோயாளியான என் மனைவிக்கு ஆகாரத்தைக் கொடுத்துவிட்டு படபடக்கும் வெய்யிலில் வீடு திரும்பினேன். நான் வீட்டை அடைந்து ஒரு மணிக்கெல்லாம் "சார்...சார்..." என்று வீதியில் கூவும் குரலைக் கேட்டு பீதியுடன் ஓடினேன். "நாகம்மா...ஆஸ்பத்திரியில் விட்டு இருந்தீர்களே... அவர்கள் வீடு இதுதானே" என்று கேட்கும்போதே என் பாடு கலங்கிவிட்டது, "ஆமாம்...ஆமாம் என்ன சமாச்சாரம்" என்று வாய் குழறக் கேட்டேன்- "அவர்கள் கணவர் நீங்கள் தானே... அந்தம்மா திடீர் என்று மார் படபடப்பு ஏற்பட்டு இறந்து விட்டார்" என்று தினமும் பல சாவுகளைச் சொல்லி சுரம்பேறிப்போன தன் வாயால் சர்வ சகஜமாய் சொல்லி விட்டு சைக்கிளில் பறந்தான்.

(தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்)

ஸ்ரீ. வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

இனியாவது விமோசனமுண்டா?

எங்கும் புதுமை, ஏதும் புதுமை
காசும் புதுமை, அரசும் புதுமை
கலையும் புதுமை, கல்வியும் புதுமை
எண்ணமும் புதுமை, திட்டமும் புதுமை.
துன்முகி மறைந்தனள், ஹேமலாம்பாள் பிறந்தனள்
நடந்ததை மறந்து, நம்பிக்கை மிகுத்து,
தோதகம் அகன்று, தெய்வத்தை நினைத்து
அன்பகம் வளர்த்து, தியாகம் சிந்தித்து.
உனக்கே போலவே, பிறர்க்கும் எண்ணுக.
நதிபல நாடும் நன்கடல்போலே, மதம் பலநாடும் ஆண்டவா!
கதிபல நாடும் எம்மனம், சதிபலநாடும் பதவியோர்
மதிதனை மதித்திடா தகற்றிட, விதிதனை விதித்திடு இப் பாரதத்தே.

1. கூலிக்கு மாரடிக்கும் வியாபாரமா?

இன்று, எங்கும் எல்லாம் புதுமையாகவே உளது. ஆனால், நாம் பட்டுவந்த கஷ்டங்களும், படயிருக்கும் நஷ்டங்களும் மட்டும் மாறுபாடடையாது, உருவிலும் அளவிலும் ஆதரவுபெற்று வளர்வதாகவே காண்கிறது. சுதந்திரமும் சுயேச்சையும் பெற்றுள்ள நாம், மதப்பற்றற்ற அரசாங்கத்தின்கீழ், மதப்பற்றையும், தெய்வ நம்பிக்கையும் நன்கு மறக்கப்பட்டு, பிறரை அடக்கியாளவும், நமக்காகப் பயன்படுத்திக்கொள்ளவும் சுயேச்சை பெருக்கி, உபதேசங்கள் செய்து, தலைக்குத்தலை தலைவர்களாக விளங்கப் பயில்விக்கப்பட்டேபோகிறோம். இந்நகரில், தெருவுக்குத் தெரு, ராமாயண, பாரத, பாகவத, கீதா காலக்ஷேபங்கள், தினந் தவறாது நடந்தேறிவருகின்றன. பேட்டைக்குப் பேட்டை மதசம்பிரதாய கிரந்த காலக்ஷேபங்கள் காலையில் நடந்தேறுகிறது. பரமநாஸ்திகர் வீட்டிலும், கூலிக்குத் தெய்வபூஜையும், சகஸ்ரநாம பாராயணமும், மந்திர தந்திர விசித்திர சாதனங்களும் நடந்தேறுகின்றன. இவற்றையெல்லாம் சிரத்தையோடும், நம்பிக்கையோடும் கேட்டுப் பயன் பெறுவோர் எத்தனை பேர்? தெய்வ பக்தியும், உண்மை மதப்பற்றும் பெருகி, சமய துவேஷமும், இதரர்மீது அசூயையும் அகன்று, அன்பும் ஆஸ்திகமும் பொதுப்பட வளர்ந்திடும் வகையிலா இந்தக் காலக்ஷேபங்களெல்லாம் பயன்படுகின்றன? இவையாவும், சிரத்தையும் நம்பிக்கையுமில்லாதவர்கள், பணமிதப்பாலோ, பதவி மோகத்தாலே, கியாதிவேட்கையாலோ, ஒவ்வொருவராக முன்வந்து, ஒவ்வொருவரை ஆதரித்து, பிறரது மதசமயானுஷ்டானங்களை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அவமதித்திட ஏற்பாடு

செய்துவரும் 'கூலிக்கு மாரடிக்கும்' வியாபாரச் சரக்கே யாகிவருகிறது.

2. தாயைக்கொன்றிடும் மக்கள் உண்டா?

ஹிந்து மதத்தில் அத்வைதமிருந்தாலென்ன, த்வைத மிருந்தாலென்ன, விசிஷ்டாத்வைத மிருந்தாலென்ன?—வைஷ்ணவம் தலைதூக்கினாலென்ன? சைவம் தலைசிறந்தாலென்ன? பௌத்தமும் சமணமும் பரந்துபோனால்தானென்ன? அனைத்து சமயங்களும் ஒரே மதத்தின் கிளைகள்தாமே? கண்காண முடியாத ஒரே தெய்வத்தை நாடிப்போகும் குருடர்களாகிய நமக்கு, வழிகாட்டியா யமைந்த வெவ்வேறு ஊன்றுகோல்கள்தாமே?

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்
சண்டைசெய்தாலும் சகோதரர் அன்றோ"

என்று பாரதியாரே சொல்லியில்லையா? ஓர் மதத்துள் பல ஜாதிகளிருப்பது அவசியந்தானே—குடும்பம் வேறு, சமூகம்வேறு என்ற வித்தியாச மறியாத கசடர்களா நாம்? ஜாதிபேத ஒழிப்பு என்பது வேறெந்த மதஸ்தரேனும் தமது அரசாங்கக் கொள்கையாகவாவது, சமூகக் கொள்கையாகவாவது கொண்டுள்ளார்களா? கிறிஸ்தவ அரசாங்கமும் இன்றும் 'மதசமய பாதுகாப்பாளர்' என்ற பெருமை கொண்டில்லையா? முகம்மதியரும் சமயப் பாகுபாடுகள் மதித்து வளர்த்தே வரவில்லையா? எல்லா மதங்களையும் தன்னுள்ளடக்கி, எவ்வித ஜாதி பேதமும் வேர்விட்டுத் திடம் பெற வளர்ந்திட அனுமதித்திடும் சகிப்பு மிகுந்த ஹிந்து மதமொன்றிற்கு மட்டுந்தானா, அதன் பாதுகாப்பாளராயிருக்க வேண்டிய ஹிந்து மக்களாலேயே கேடுகிட்டுவது? கிளைகளை வெட்டியெறிந்துவிட்டால், மரத்திற்கு அழகோ, வளர்வோ கிட்டுமா? பிள்ளைகளைக் கொன்றுவிட்டுப் பெற்றோர்களைமட்டும் வளர்த்திடப்பார்ப்பது என்ன தர்மம்? தாயைக் கொன்றிடும் மக்கள், என்றுவது, எங்காவது, எவராலாவது நன் மதிப்பு பெறக் கூடுமா?

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள்"

என்று இன்று நாம் தொழுதேற்றும் பாரதியாரே நம் பாரதத் தாயின் அகத்தில், பல்வேறு மதங்களும் பாஷைகளுங்கொண்டு, ஒரே சிந்தனையாளராய் இருத்தலே அவசியமென்பதை அறிவுறுத்தவில்லையா?

3. பிரசாரங்கள் பெருமைக்காகவா?

நாட்டில் நடந்தேறும் பிரசாரங்களெல்லாம் பெருமைக் காகவா? எள்ளளவாகிலும் எவர்க்காகிலும் பயன்படக் கருதியல்லவா? புதிதாய்ப் பதவி யேற்ற அரசாங்கமாவது இனி இத்

தகைய மதாசார அழிப்புக்களில் கவனஞ்செலுத்தி, மித்திரபேதக் கொள்கை வளர்க்காது, அவரவர் குடும்பங்களில் அவரவரது மதாசார குலாசார வளர்ப்புக்கே மதிப்பும் கௌரவமும் கொடுத்து வந்தால்தான் நமக்கும், நம்நாட்டிற்கும், நமது அரசிற்கும், வருங்காலத்திலாவது, உலக மதிப்பும், சமூக நலனும், குடும்ப சுகமும் ஏற்படச் சந்தர்ப்பங்களேதேனும் உண்டாகக்கூடும். இல்லையேல், எவ்வித அரசாங்க க்ஷேம, நல, லாப, சுக சௌக்கிய திட்டங்களும், வீண் விரய காரணமான சச்சரவுமிகுக்கும் சுய லாபக் கியாதி கருவிகளே யாகுபவையாம். எவ்வித மத சமூக சீர்திருத்த வகையும், மதத்தற்கொலையும், தாய்க் கொலையுமான அறிந்து செய்யப்படும் அடாத பாதகமே யாகும். விபரீத பலன் விளைக்கும் வீண் பிரசாரங்களைச் செய்து போவதால், தலைக்குத் தலை பெரியதனம் வலுத்து, துவேஷமும், சச்சரவும், கட்சிப் பிரதி கட்சிகளும் வளர்க்கும் சமூகந்தானே வளர்வதாகும். குடும்பத்தில் மதாசார விருத்தி வளர்க்கப்பட்டாலன்றோ மானிடர் மனம் பக்குவப்பட்டதாகிச் சமூகத்தில் பிற நலத் தொண்டுகளுக்குத் தயார்ப்படுவதாகும். நிலத்திற்கு நீர்பாய்ச்சாது, விதைகள் விதைத்துப்போகும் அதிகாரிகள் எவ்வளவு கோடியிருந்தாலுமென்ன?

4. காந்தியின் கொள்கையை அனுஷ்டிக்கலாகாதா?

அரசாங்கத்தின் மீது குடிகளும், குடிகள் மீது அரசாங்கமும் பொறுப்பேற்றிப் பழிகூறிப் போவதில் எவர்க்கும் பிரயோசனமில்லை. பள்ளிக்கூடங்களில் தெய்வசிந்தனை கற்பிக்கப்படவேண்டும். கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் தொழுகை விடாது, காலாகாலத்தில் தொழுது வரவில்லையா அவரவர் மதாசாரப்படிக்கு? ஹிந்துக்கள் மட்டுந்தானா, அவரவர் குலாசாரப்படிக்குத் தெய்வ வணக்கமோ, சந்தித் தொழுகைகளோ நடத்திப்போவது ஜாதி பேத மிகுக்கும் அவமானகர அநீதிச் செயலாவது? காந்திமகான் கூட ராம நாம ஸ்மரணையும், அந்தித்தொழுகையும் போதித்து, நடத்தியும் வந்தாரே—அதையாவது அவர் பெயர் சொல்லி அதிகாரஞ் செலுத்துவோர் அமுலுக்குக் கொணரலாகாதா?

5. தேர்தலின் படிப்பினை

காங்கிரஸ் கட்சியார் பதவிக்கு வந்தது எதனால்!...பெருங்காயச் செப்பும் நெடுநாள் வாசனை வீசாது!—இவ்வருடத்திய தேர்தல், காங்கிரஸ் கட்சியாளரது ஊழலை நன்கு பிரபலப்படுத்திவிட்டது. அது போதாது, அதன் ஆட்சித் தரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டக் கேரளத்தில் போட்டிக்கு வந்ததுபோலக் கம்யூனிஸ்டு கட்சி பதவி வகிக்கிறது. அங்கு காங்கிரஸ் கட்சி ஏன பதவி பெறவில்லை?—தேர்தல் காலத்தில், காங்கிரஸ் மந்திரிசபையில்லாது, கவர்னர் ஆட்சி யிருந்ததுதான் இப்படியானதின் ரகசியம். இனியும், எல்லா மாகாணங்களிலும், தேர்தல் முன்பு மந்திரிகள் பதவி நீங்கித் தேர்தல் அபேக்ஷித்தலே முறையென்பதை கேரளத் தேர்தல் வெளிப்படுத்தியதோடு, பதவியிலிருப்பதால், மந்திரிகள் எத்துணை அட்டூழியங்கள் செய்து, திரும்பவும் பதவி பெற முயலக்கூடுமென்பதைச் சென்னை மாகாணத் தேர்தல் நன்கு வெளிப்படுத்தியுமுள்ளது, தினசரிகளில் வெளிப்பட்ட அசம்பாவித சர்ச்சைகளாலும், புரட்டு வாதங்களாலும்.

6. பழசுகளெல்லாம் பித்தர்களது செயலா ?

போதாக்குறைக்கு, நயாபைசா கலவரம் வேறு. ரூபாய்க்கு 100 பைசா வைத்தாலென்ன. அதற்குக் கணக்கில்லையா? நேர்ப்பட்ட வாய்ப்பாடில்லையா? பள்ளிப் பிள்ளைகளுக்கு, நாணயத்தின் வகைத்ததான வாய்ப்பாடு எவ்வளவு பாதிக்கப்பட்டுவிட்டது!— பழைய நாணயங்களை ஆறே மாத காலத்தில் வாங்கிக்கொண்டு, புதிய நாணயத்தை, பழைய கணக்குப்படியே நேராக வகுத்திடக் கூடாதா? எல்லாம் விபரீத ஞானமா யிருக்கிறதேயொழிய, நேர்ப்பட்ட ஒழுங்குகொண்ட திட்டமாகக் காணோமே—. பழசுகளெல்லாம் பித்தர்களது செயலா? இன்றிருந்து நாளைபோகும் நவீன அதிகாரிகள் தாம் ஞானவான்களா? பழையதுகளை விடாது பரிபாலித்துப் புதிய வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதன்றோ க்ஷேமநலந் தேடும் அரசு முறை!

“சாத்திரங்கள் ஒன்றும் காணார்—பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்றா யிருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்,
தோத்திரங்கள் சொல்லி அவர்தாம்—தமைச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்
ஆத்திரங்கொண்டே இவன் சைவன்—இவன்
அரிபக்தன் என்று பெருஞ் சண்டை யிடுவார்”

பாரதியார் அன்று நெஞ்சம் பொருது பதைத்துக் கதறிய சொற்கள், அவர் வேண்டிய அன்னியராட்சியகன்றும், நம்மவர் ஆட்சியிலும் இன்றும் அப்படிக்கே வேரூன்றி வளர்கிறதே!—போனது போகட்டும்—இனியாவது விமோசனமுண்டா சுதந்திர இந்தியாவில்?—. பதவி தேடும் அதிகாரிகள் மனத்தில் ஆசையும் சுயநலமும் குடிகொண்டாலும், அவர்களைத் தேர்ந்தனுப்பும் வாக்காளராம் நமது மனம் பண்பட்டு, அன்பும், தொண்டும், உண்மைத் தெய்வ பக்தியும் ஏற்று வளர்த்திடுமாகில், இனியாவது விமோசன மேற்பட வழிகோலப்படுவதாகும்—. இல்லையேல், என்றும் விமோசனமில்லைதான்.

மனைவி: என்ன இப்போ புதுசர்கார் புதுசட்டங்கள் கெண்டுவரப்போறாளாமே!

கணவன்: ம ந் தி ரி சபை புதுசா வரப்போது புது சட்டம் மாறிண்டேதான் இருக்கும். ஆனால்........நீ போட்ர சட்டத்திற்குமாறு தலே கிடையாது.

பகவத்கீதை குறிப்புகள்

ஸ்ரீராஜாஜி

பதின்மூன்றும் அத்தியாயம்.

சுலோகம் : 1-3

உடலையும் உடலுக்குள் தங்கியிருக்கும் ஜீவனையும் ஒன்று என்று எண்ணிக் குழப்பமும் கவலையும் படும் மனித சுபாவத்தைப் பற்றி இரண்டாம் அத்தியாயத்தில் 11-வது சுலோகத்தில் ஆரம்பித்துக் கண்ணன் பார்த்தனுக்கு உபதேசித்தான் அல்லவா? அதை இவ்விடம் மறுபடி எடுத்துச் சொல்லுகிறான்.

சரீரமானது ஆத்மாவுக்கு ஒரு தங்கும் இடம். க்ஷேத்திரம் என்றால் இடம். சில நாட்கள் இருக்கவேண்டிய இடம். க்ஷேத்திரமாகிய சரீரத்தில் தங்குபவன் ஜீவன். சரீரத்திற்குச் சேதனம் இல்லை. அதற்குள் வசிக்கும் ஜீவனுக்குச் சேதனம் இருந்து வருகிறது. ஆனபடியால் சரீரிக்குப்பெயர் இடத்தை அறிகிறவன், க்ஷேத்திரக்ஞன் என்பதாக இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது.

தச்சன் ஒரு மனித உருவத்தையோ வேறு பிராணி உருவத்தையோ செய்கிறான். அதற்குச் சேதனம் இல்லை. அதில் சேதனம் உள்ள உயிர் புகுந்தால் அந்த உருவம் ஒரு சரீரம் ஆகிவிடுகிறது. "நான்" என்று எண்ண ஆரம்பிக்கிறது. அதைப் போலவே நம்முடைய சரீரம் "நான்" என்று எண்ணுவதும் பேசுவதும், அதற்குள் தங்கும் ஜீவனுடைய வேலை.

அதற்குமேல் கீதாசாரியன் இரண்டாவது சுலோகத்தில் சொல்லுகிறான்: "எல்லா சரீரங்களிலும் தங்கும் சேதன் ஜீவன் நானே என்று அறிவாய்! இதை ஒருவன் அறிந்து கொண்டால் அவன் ஞானம் அடைந்து விட்டான்!"

அறியாமையின் மூலம் தன் உடலைத் தானாக எண்ணி மயங்குவது. அதை ஒழித்துவிட்டால் தான்வேறு, தன் உடல் வேறு என்று உணர்ந்துகொண்டு ஞானம் அடைந்தவன் ஆகிறான். அந்தச் சேதனாகிய ஆத்மாவும் சேதன சொரூபம் பெற்றது, ஈசுவரனுடைய சக்தியே என்று அறிந்துவிட்டால் பூரண ஞானவான் ஆகிறான்.

சுலோகம் : 4-6

'ரிஷிகள் வேதோபநிஷத்துகளிலும் பிரம்ம சூத்திரங்களிலும் விளக்கி யிருக்கிறார்கள். அதை நானும் சொல்லுகிறேன்' என்கிறான் கீதாசாரியன்.

சரீரத்திலுள்ள புலன்களின் விகாரமே விருப்பு வெறுப்பு சுக துக்கம் முதலிய நிலைகள்.

சுலோகம் : 7-11

ஞானத்துக்கு வேண்டிய குணங்களை கீதாசாரியன் சொல்லுகிறான். தன்னடக்கம், உள்ளும் புறமும் ஒன்றாக இருத்தல், ஜீவகாருண்யம், குற்றத்தை மன்னிக்கும் சுபாவம் நேர்மை, குருவுக்கு சுச்ரூஷை செய்வது, பரிசுத்தம், உறுதி, புலனடக்கம், விஷயானுபாவங்களை விரும்பாமை, ஆணவமின்மை, பிறப்பு இறப்பு, வியாதி—இவற்றின் துக்கத்தை நன்றாக உணர்ந்து இருத்தல், எதிலும் பற்றுக் கொள்ளாமல் இருத்தல், என் மகன் என் மனைவி என் வீடு என்கிற எண்ணம் வைத்துக் கொள்ளாதிருத்தல், வேண்டியது வேண்டாதது இரண்டிலும் ஒரே விதமான மனநிலையைக் காத்தல், ஏதும் வேண்டாத சுத்தமான தெய்வபக்தி, தனிமையில் இன்பம் கண்டு ஜனக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் ருசி காணாமலிருப்பது, ஆன்ம உணர்ச்சியில் நிலைத்திருத்தல், எப்பொருளிலும் அதன் மெய்ப்பொருளைக் காணல்,—இந்தக் குணங்கள் இருப்பின் அதுவே ஞானநிலை. இல்லையேல் அஞ்ஞானம்.

இந்த நான்கு சுலோகங்களில் ஞான நிலைக்கு வேண்டிய பான்மையெல்லாம் சுருங்கச் சொல்லப்பட்டிருக்கிறது.

சுலோகம் : 12-18

இந்த ஏழு சுலோகங்களில் ஞான நிலை அடைந்தவன் அந்த ஞானத்தால் காணும் பரம்பொருளை வர்ணிக்கிறான்.

பரம்பொருள் அனாதியான பொருளாகும். அதற்குப் பொருளும் தன்மையும் இல்லை.

"இல்லதும் உள்ளதும் அல்லது" என்று ஆழ்வார் சொல்வதைக் கீதையில் "நஸத் தந் நாஸத்" என்கிறது. அதன் கையும் காலும் கண்ணும் தலையும் பிரபஞ்சம் முழுதும் செல்லும். எங்கும் அதன் கை எங்கும் அதன் கண். அனைத்திலும் பரவி நிற்கிறது. நம்முடைய இந்திரியங்களுக்குச் சக்தி தருவது அதுவே. ஆனால் அந்தப் பரம் பொருளுக்கு எவ்வித இந்திரியங்களும் அவசியமில்லை. பார்ப்பதற்கும், மோப்பதற்கும் இன்னும் மற்றப் புலனுணர்ச்சிக்கும் நமக்குத்தான் இந்திரியங்கள் அவசியம். பரம்பொருள் அவையின்றியே அனைத்தையும் அறியும். அனைத்தையும் புறம் நின்றே தாங்குகிறது. தனக்கென்று குணம் இல்லாமல் எல்லாக் குணங்களையும் அதுவே தாங்குகிறது.

அசையும் பிராணிகள், அசையாப் பொருள்கள்—அனைத்திலும் உள்ளேயும் புறத்திலும் அது நிற்கிறது. அதைக் காண இயலாது. நமக்கு வெகு ரத்திற்கில்கிது

றது. வெகு அண்மையிலும் நிற்கிறது. வெவ்வேறு பொருள்களாகப் பிரபஞ்சத்தில் வடிவங் கொண்டு நிற்கி றது. ஆனல், அதுவே பிரிவு இன்றி எல்லாப் பிராணிகளி லும் பிராணியாகவும், பொருள்களின் வழி அவ்வப் பொரு ளாகவும் நிற்கிறது. வேற்றுமைத் தோற்றம் காட்டி ஒரே பொருள் பல பொருள்களாக நிற்கிறது. அதன் ஒளிக்கு நிழல் என்பதும் இருள் என்பதும் இல்லை. அதுவே அறிவு, அறியப்படும் பொருள், அறியும் வழி அனைத்தும். என் பக் தன் இதை அடைகிருன்.

சுலோகம் : 19-23

இந்தச் சுலோகங்களில் சேதனமற்ற பொருள்களும், சேதனமற்ற வகையில் அடங்குகிற சரீரங்களும் ஆகியவற் றுக்குப் பிரகிருதி என்றும், சேதனனை ஜீவனுக்குக்குப் புருஷன் என்றும் பெயரிட்டுச் சொல்லப்படுகிறது. புரு ஷன் பிரகிருதி இரண்டுமே ஈசுவரனுடைய சொரூபம். ஆனபடியால் அனதிப் பொருள்கள், பிரகிருதி என்று சொல்லப்பட்ட பொருள்களின் விகாரங்களே செயல்கள். அவற்றினின்று உண்டாகும் சுகதுக்கங்களைப் 'புருஷன்' பெறுகிருன். 'பிரகிருதி'யில் அமர்ந்திருக்கும் 'புருஷன்' அவற்றை அனுபவிக்கிருன். ஆனல் அந்த புருஷனுக்கும் மேலவனகி ஈசுவரன் பரமாத்மாவாக இதயத்தில் கோயில் கொண்டிருந்து எல்லா அனுபவங்களையும் அனுமதித்துச் சாக்ஷியாகப் பார்த்து வருகிருன். இதைச் சரியாக அறிந் தவனே ஞானி. அறிந்தவன் என்ருல் உணர்ந்து உணர்ந்த வழி நடப்பவன்.

தேகம், ஆத்மா, பரமாத்மா என்று இந்தவிதமாக எடுத்துச் சொல்லியிருப்பதை உபநிஷத்து மந்திரங்களிலும் பார்க்கலாம். "ஒரு மரத்தில் இரண்டு பறவைகள், ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் உட்கார்ந்திருக்கின்றன. ஒன்று பழங்களைத் தின்கிறது. மற்ருென்று பழம் அருந்தாமல் சும்மா பார்த்துக்கொண்டிருக்கிறது. புருஷனகிய பழம் தின்னும் பறவை மோகத்தில் மூழ்கி சுதந்திரமற்றுத் துக் கப்படுகிறது. ஆனல் அந்தப் பறவை பரமாத்மாவாகிய மற் ருெரு பறவையை நோக்கி ஞானமடைந்து துக்கத்தை நீக் கிக் கொள்கிறது." இது முண்டகோபநிஷத்து மந்திரம். இதுவே கீதையில் ஐந்து சுலோகங்களில் வேறுவிதமாக விளக்கப்படுகிறது.

சுலோகம் : 24-25

சிலர் தியானம் அப்பியசித்து சரீரத்துக்குள் வசிக்கும் ஆத்மாவின் உண்மையான பான்மையை உணரப் பெறு

வார்கள். சிலர் புலன்களை அடக்கி ஞான மார்க்கத்தில் ஆத்ம தரிசனம் பெறுவார்கள்; அதாவது இரண்டாவது அத்தியாயத்தில் 55-வது சுலோகம் முதல் 72-வது சுலோகம் வரையில் விளக்கப்பட்ட முறையில். வேறு சிலர் கர்ம யோக முறையில் ஆத்ம தரிசனம் அடைவார்கள்.—அதாவது பலனைக் கருதாது கடமைகளைச் செய்து பற்றற்ற வாழ்க்கை வாழ்பவர்கள். மற்றும் சிலர்—இது முக்கியமான விஷயம்—பெரியோர்களிடம் பக்தி சிரத்தையுடன் உபதேசம் பெற்று ஆத்ம தரிசனம் அடைந்து பிறவிக் கடலைத் தாண்டுவார்கள்.

சுலோகம் : 26-34

எத்தகைய தாவரமாயினும் சரி, பிராணிகளாயினும் சரி, அனைத்தும் சரீரமாகிய க்ஷேத்திரமும், சரீரக்ஞனாகிய ஆத்மாவும் சேர்ந்ததாகும். அழிவற்ற பொருள் அதற்குள் நிற்கிறது. இதை அறியவேண்டும். இதை அறிந்து கொண்டவன் அனைத்தையும் சமநோக்குடன் பார்ப்பான். சரீர வித்தியாசங்களாலும் குண வித்தியாசங்களாலும் ஏற்படும் கர்ம வித்தியாசங்களால் குழப்பம் அடையமாட்டான். ஆன்ம சமத்துவத்தைக் காண்பான். அதுவே ஞானமாகும். அதுவே மனிதனை மேல்பதவி அடையச் செய்யும்.

வெவ்வேறு வடிவங்களில் இருக்கும் பிராணிகளின் சரீரங்களையும் காரியங்களையும் பார்த்து மயங்காமல் அவற்றினுள் இருக்கும் ஒரு மெய்ப்பொருளின் தன்மையை உணர்ந்து, ஒரு வேரினின்று மரம் பல கிளைகளுடன் பரவி நிற்பதுபோல் நிற்கும் உயிர்களின் ஒன்றித்த பான்மையை உணர்ந்து ஞானநிலை அடைவான்.

சரீரம் வேறு ஆன்மா வேறு என்பதை உணர்ந்தால் அந்த ஆன்மாவின் பரிசுத்த நிலையைக் குழப்பமின்றிக் காண்பான். அந்தப் பொருள் மாசு படாமல் நிற்கும் என்பதை அறிவான். சூரியன் உலகம் அனைத்தும் பிரகாசிப்பது போல் ஆத்மா சரீரங்கள் அனைத்தையும் ஒளி பெறச் செய்கிறது. ஒளி பெற்ற இடங்களின் அழுக்கு, சூரியனைத் தீண்டாது. அதுவேபோல் சரீரங்களின் குற்றம் ஆத்மாவைத் தீண்டாது. சூரியன் ஒளி தருவதுபோல் ஒளிதந்து கொண்டு நிற்கிறது.

"யோ ஸாவ ஸௌ புருஷ :
ஸோ ஹமஸ்மி"

என்கிற ஈசாவாஸ்ய உபநிஷத்து மந்திரம் இந்தச் சூரிய உபமானமே.

எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ., எல். டி.,
ஆசிரியர், ஹிந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

5. ஜாம் நகர்.

வெராவலில் அன்று மாலை வரையில் தங்கினோம். நாங்கள் தங்கிய இடம் "போஜன் ஷாலா" (போஜன சாலை), என்ற ஒரு வகைச் சத்திரம். இது சத்திரம் போலவே இல்லை; பெரிய மாளிகையாகக் காணப்பட்டது. இது நவீன முறையில் வசதிகள் வாய்ந்தது. கீழேயுள்ள பாக சாலை, சாப்பிடும் இடம்-இவை மிகப் பெரியன. பின் கட்டிஉள்ள கிணற்றிலிருந்து தண்ணீர், குழாய்கள் மூல மாக நாள் முழுதும் வேண்டிய அளவு வருகின்றது. மாடியிலுள்ள அறைகளில் நாற்காலிகளும், மெத்தைகளும், திண்டுகளும் இருந்தன. அந்தச் சத்திரத்தின் சொந்தக்காரர், அன்று முழுதும் எங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். அன்று மாலை சிற்றுண்டி உட்கொண்டதும் நாங்கள் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டோம். நாங்கள் சென்ற வழி கடைத் தெரு. அதில் பெரிய மளிகைக் கடைகளும், சிற்றுண்டிச் சாலைகளும், ஜவுளிக் கடைகளும் பல இருந்தன. சாலையின் இரு மருங்கிலும் கறிகாய்களும், பழங்களும் கூடை கூடையாக விற்பனைக்காக இருந்தன. அன்றிரவு எங்களது பெட்டி, ராஜ்கோட்டிற்குச் செல்லும் வண்டியுடன் பிணைக்கப்பட்டது. நாங்கள் ஆயாசத்தால் படுத்துறங்கினோம்.

மறுநாட் காலை 7 மணி சுமாருக்கு வண்டி ஜாம்நகர் வந்து சேர்ந்தது. ஜாம்நகர் ஸ்டேஷன், ரெயில்வே ஸ்டேஷனாகவே தோன்றவில்லை. சுற்றுவட்டத்தில் உய்யானங்களும், தோட்டங்களும் திகழ்ந்தன; இவற்றினிடையில் இலையடர்ந்த தாமரைப் பொய்கையில் தலையோங்கி நிற்கும் வெண்டாமரை மலர்கள்போல் காணப் பெற்றன பெரிய மாளிகைகள். ரயில் வண்டி ஸ்டேஷனுக்குள் நுழையும் போது பூஞ்சோலையொன்றிலே நுழைந்தது. வலப் பக்கத்தில் ஏழடுக்கு மாளிகை யொன்றும் ராஜ பவனமும் வானோங்கி நின்றன. ரயில் வண்டியிலிருந்து இறங்கிய நாங்கள் சிறிது வியப்புடன் சுற்றிலும் உற்று நோக்கினோம். எங்கும் உயர்ந்த கட்டிடங்களும், தோப்புக்களும், புல்வெளிகளும் எங்களைப் பரவசமாக்கின.

அவ்வூரில் நாங்கள் தங்கவேண்டிய இடம், அனாதைச் சிறுவர் விடுதி யொன்றாகும். அது ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ளது. எங்களை ஸ்டேஷனில் சந்திப்பதாகச் சொல்லியவர், அன்று உடல் நலம் குன்றி யிருந்ததால் வர இயலவில்லை. ஆதலால் நாங்கள்

ஒரு மணி காலம் அங்கேயே தாமதிக்கவேண்டியிருந்தது. அன்று அக்டோபர் 2ஆந் தேதி; காந்தி அடிகள் உதித்த நாள். எங்கும் அமைதி நிலவியது. அன்று நாங்கள் சுற்றிப் பார்ப்பதற்காகப் பாரித்துக் கொண்டிருந்த இடங்கள் பல; எனினும் இவற்றுள் ஒன்றையேனும் நாங்கள் சரியாகப் பார்க்க இயலவில்லை.

சுமார் 9 மணிக்கு எங்களிற் சிலர், நாங்கள் தங்க வேண்டிய இடத்தைக் கண்டறிந்து திரும்பினர். உடனே பெரியதொரு பஸ்ஸில் அந்த இடத்திற்குச் சென்றோம். அது கடைத் தெருவின் அருகில் பெரியதொரு கட்டிடமாகும். உள்ளே நுழைந்ததும் தங்குவதற்காக அறைகள் அமைந்திருந்தன. நாங்கள் கட்டிடத்தை அணுகும் போதே மழை பொழிய ஆரம்பித்தது; அரை மணிக்கு மேல் பெய்தது; பூமிப் பரப்படங்கலும் தண்ணீர் தேங்கி, மிகவும் அழகாக இருந்தது. மழை நின்றதும், அந்த விடுதியின் நிர்வாஹத்தினரின் ஏவலாளர் ஒருவர் அங்கு வந்து, நாங்கள் நகரைச் சுற்றிப் பார்ப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதாகச் சொன்னார். அங்கு அவசியம் பார்க்கவேண்டிய இடங்கள், அரண்மனை, ஸோலேரியம் என்ற வைத்திய சாலை, ரஞ்சித் ஸாகர் என்ற பெரிய ஏரி, பண்டை அரசர்களது சமாதிகள் என்றும், சுற்றிப் பார்ப்பதற்கு பஸ் ஒன்றை அமர்த்துவதாகவும் சொன்னார். அரசர்களது சமாதிகள் அமைந்துள்ள இடுகாட்டில் கோயில்களும், பூங்காக்களும் அவசியம் பார்க்கவேண்டியவை என்றார். நாங்கள் முதலில் அரண்மனை, ஸொலேரியம், ரஞ்சித் ஸாகர் இவற்றைப் பார்த்துவிட்டுப் பின்னர் பகல் உணவுக்குப் பிறகு மற்றவைகளைப் பார்க்கவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. நாங்கள் சுமார் 10-30க்கு பஸ்ஸில் ஏறிக்கொண்டோம்.

முதலில் அரண்மனையை நோக்கிச் சென்றோம். வழியில் ஸொலேரியம் இருந்ததால், அதைப் பார்க்க உள்ளே சென்றோம். இதில் சூரியனின் கிரணங்களை நோயாளிகளின்மேல் பாய்ச்சி எல்லா வகை நோய்களுக்கும் சிகிச்சை செய்கின்றனர்; இந்தச் சிகிச்சை முறை உலகத்திலேயே வேறு இரண்டொருஇடங்களில்தான் கையாளப்படுகின்றது. நாங்கள் இதை நன்கு பார்ப்பதற்கு ஆவலுடன் உள்ளே சென்றோம்; கட்டிடங்கள் தாளிடப்பெற்றிருந்தன. அன்று விடுமுறை நாள் என்று அப்போது தான் தெரிந்தது. ஆதலால் அன்று வேறிடங்களைச் சுற்றிப் பார்க்க இயலாததால் ரஞ்சித் ஸாகரை மாத்திரம் பார்த்துவிட்டுத் திரும்புவதாக முடிவுசெய்தோம்.

பஸ், மைல் கணக்காக விரைந்தோடியது. சாலைகள் புதுமுறையில் அமைக்கப்பெற்று, அழகாக அமைந்திருந் தன; நகரின் எல்லையைக் கடந்ததும் ஆங்காங்கு விளை வயல்களும், சிறு கால்வாய்களும் தென்பட்டன. சுமார் 12 மணிக்கு ரஞ்சித் ஸாகர் வந்து சேர்ந்தோம். பஸ்ஸி லிருந்து கீழே இறங்கி ஏரியை நோக்கிச் சென்றோம். ஏரி மிகப் பெரியது; அதைச் சுற்றிலும் தோப்புக்கள் விளங் கின. நாங்கள் ஏரியை அணுகியதும் மழை பலமாகப் பொழிய ஆரம்பித்தது; சிறிது நின்றோம். மழை நிற்க வில்லை; உடனே பஸ்ஸுக்கு விரைந்தோம். பஸ்ஸிலும் கால் மணி தாமதித்துப் பார்த்தோம், மழை நிற்குமா என்று. பின்னர் தங்குமிடத்தை நோக்கிச் சென்றோம் ஏமாற்றத்துடன்.

அன்றைய விடுதிக்குச் சென்றதும் எங்களுக்குக் குஜ ராத்தியர் முறைப்படி உணவு அளிக்கப்பட்டது. போஜன சாலையில் எங்களுக்காக இரண்டு வரிசை இலை போட்டிருந் தார்கள். வாசலில் கால் கைகளைக் கழுவிக் கொள்வ தற்குப் பெரிய தடாக்களில் தண்ணீர் நிரப்பியிருந் தார்கள். வட்டமான தையல் இலைமீது புரச இலைச் சருகு தொன்னை வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவருக்கும் அருகில் வெண்கலக் குவளையில் தீர்த்தம் நிரப்பப்பெற் றிருந்தது. முதலில் தொன்னையில் சாம்பார் பறிமாறி னார்கள்; பின்பு கோதுமை லட்டும், பஜ்ஜியும் பரிமாறி னார்கள். எங்களுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. சிறிது தாமதித்துப் பின்னர் இவற்றை உண்ண ஆரம்பித்தோம். பத்து நிமிஷத்திற்கெல்லாம் பரிமாறு பவர்கள் மறுபடியும் தோன்றினர். பெரிய தாம்பாளங் களில் கோதுமை லட்டும், பஜ்ஜியும் வைத்துக் கொண்டு, இவற்றை தரையிலே நகர்த்தி, இரு கைகளாலும் இரண்டு பக்கங்களிலுமுள்ள இலைகளில் பரிமாறினர்கள். "வலக்கையும் இடக்கையும் அறியாதவர்கள்" என்ப தற்கு ஒருவகை விளக்கம் அன்றைய அநுபவத்திலி ருந்து எங்களுக்குக் கிடைத்தது. பரிமாறுபவர்கள் சிலர், நாங்கள் அதிகம் லட்டு வாங்கிக்கொள்ளாததால் திகைத்து நின்றனர். சற்று நேரத்தில் யானை மண்டையில் சாதம் கொண்டு வந்து பரிமாறினர்; பின்பு மோரும் பரிமாறினர். அவர்கள் எதிர்பார்த்த அளவிற்கு நாங்கள் சாதம் வாங்கிக் கொள்ளாததால் சமைத்திருந்த சாதமும் மிகுந்திருந்தது. அவர்களது முகத்தில் தோன்றிய ஏமாற்றம் எங்களை வியப் புறச் செய்தது; எங்களது ஏமாற்றத்தை அவர்கள் அறிந் தார்களோ என்பதுதான் சந்தேகம். பரிமாற வந்த வர்கள் மடித் துணி உடுத்திக் கொண்டிருந்தனர். அன்பு தவழும் முகத்துடன் அப்போதப்போது நாங்கள் விரும்பு

வனவற்றை இலையில் இட்டனர். நாங்கள் ஒவ்வொருவரும் ஐந்தாறு லட்டாவது வாங்கிக் கொண்டிருந்தால், அவர்கள் மனம் களிப்படைந்திருக்கும்: எங்களுக்கு இரண்டிற்குமேல் சாப்பிட இயலவில்லை.

சாப்பாடு முடிந்ததும் அதிகாரிகளை வாழ்த்தி அவர்களுடைய உபசாரத்திற்காக வந்தனோபசாரம் செய்துவிட்டு, 4 மணி சுமாருக்கு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டோம். வழியில் தென்னிந்தியர் சிற்றுண்டிச் சாலை ஒன்றினைக் கண்டோம். உள்ளே காபி அருந்திவிட்டு கடைத் தெரு வழியே நடந்து சென்றோம். சற்றுக் கடைசியில் சென்ற என்னைக் கண்டு ஒருவர், "நீங்கள் தஞ்சாவூரா, ஸார்? எத்தனை நாளைக்கு இங்குத் தங்குவீர்கள்?" என்றார். "ஆமாம் ஸார்! இதோ போய்க் கொண்டேயிருக்கிறோம்" என்றேன். "இன்று என்ன பார்த்தீர்கள்? இன்று விடுமுறையாயிற்றே!" என்றார்.

"எல்லாம் பார்த்தோம், பூட்டிக்கிடந்த ஸொலேரியம் அணுக முடியாத அரண்மனை... இவ்வளவுதானே, இந்த ஜாம்நகரில்?"

"என்ன இப்படிச் சொல்லிவிட்டீர்கள்! இந்த நகரத்தில் விசேஷம் என்ன என்றால், பழைய நாகரிகத்தின் சின்னங்களும், நவீன முறையில் கட்டிடங்களும் மிக மிக உள்ளன: நகரத்தின் நடுவில் ஓர் அரண்மனையில் 9-வது நூற்றாண்டு முதல் 18-வது நூற்றாண்டு வரையிலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் அருகாமையிலுள்ள கிராமங்களிலிருந்தும் பட்டினங்களிலிருந்தும் வந்தவை."

"பின்னும் விசேஷங்கள்...?"

"ஸொலேரியம், ஆயுர்வேதக் கல்லூரி—இவைகள் தான் தெரியும். இரண்டொரு அரண்மனைகள் அவசியம் பார்க்கவேண்டியவை. ஒன்றில் புராதனமான கிணறு இருக்கிறது. தரையில் ஒரு சிறு துவாரத்தின் வழியே ஊதினால், கிணற்றிலிருந்து தண்ணீர் மேலே எழும். ஸுவிர் ஸாகரம் அவசியம் பார்க்கவேண்டிய ஏரி. இந்த நகரத்திய மக்கள் உல்லாசச் சாப்பாட்டிற்கு இங்குப் போவது வழக்கம்."

அவர் அந்த ஊருக்கு வந்து இரண்டு வருஷ காலமாகிறது. எங்களைக் கண்டதும் தமிழில் பேசவேண்டுமென்று ஆசை கிளர்ந்தது இயல்புதானே! ஐந்து நிமிஷம் எங்களுடன் பேசிவிட்டுக் குதூகலமாகச் சென்றார்.

அன்று மாலை 6 மணிக்கு நாங்கள் ரயிலில் ஏறினோம். வானம் கறுத்திருந்ததால், காட்சிகள் அதிகம் காண இயலவில்லை. இரவு 12 மணிக்குத் துவாரகை வந்து சேர்ந்தோம்.

தை மாதத்தில் கண்ட
சில காட்சிகள்
SAMUEL

காளிதாஸர் கனவு

10, ஊர்வசி : சௌந்தர்ய தேவதை.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

காளிதாசர் பிறகு கூறினர் : "சந்திரகலா தேவியை விட்டு நான் பிரிந்தது முதல் அவளுடைய அழகையும் அன்பையும் பற்றி நினைந்துருகி அவளை மீண்டும் அடைய வேண்டும் என்ற காதல் மேலிட்டிருந்த காலத்தில் நான் "விக்கிரமோர் வசீயம்' என்ற நாடகத்தை இயற்றினேன். அதில் விக்கிரமாதித்ய அரசனுடைய பெருமையையும் த்வனி யுருவாக மறைபொருளாகக் கூற எனக்கு விருப்பம் ஏற்பட்டது.

ஊர்வசி தரிசனம்.

ஒரு காலத்தில் பூரூரவச் சக்கரவர்த்திக் கதிரவனை வணங்கித் திரும்பி பூவுலகுக்கு வரும்பொழுது சில அப்சர பெண்கள் கூக்குரலிட்டார்கள். அப்சரப் பெண்களுள் ஊர்வசியும், அரம்பையும், மேனகையும் முக்கியமானவர்கள். அவர்கள் எல்லோரும் கைலாயத்தில் சிவபெருமானைச் சேவித்துத் திரும்பிவரும் வழியில் ஊர்வசியும் அவளுடைய தோழி சித்திர லேகையும் அரசர்களால் சிறைப்படுத்தப் பட்டார்கள். அரம்பை முதலான அப்சரப் பெண்கள் நடு நடுங்கிக் கூக்குரலிடவே அரசன் அரம்பையைப் பார்த்து பயப்படாமலிருக்கச் சொல்லி ஊர்வசியைச் சிறை மீட்க வெகு வேகமாக விமானத்தை வானவீதியில் செலுத்தத் தேர்ப் பாகனுக்குக் கட்டளை யிட்டான். அரசன் விமானத்தில் வேகமாகச் சென்று அசுரர்களை வென்று ஊர்வசியையும் சித்திரலேகையையும் சிறை மீட்டினன்.

அப்படி அவன் திரும்பி வருகையில் அச்சத்தால் மயக்கமடைந்திருந்த ஊர்வசிக்குக் கொஞ்சங் கொஞ்சமாக மயக்கந் தெளிவதைக் கண்ட அரசன் "சந்திரன் உதயமான பிறகு இருட்டால் விடுபட்ட இரவு போலும், புகையால் விடுபட்ட தீச்சுடர் போலும், மலையிலிருந்து வீழ்ச்சியால் கலங்கிய கங்கையின் நீர் தெளிவடைவதைப் போலவும், இவள் மயக்கத்திலிருந்து தெளிந்து விளங்குகிறாள்" என்று களித்தான்.

"இவளைப் படைத்தவர் நாராயண ரிஷி என்றும் தன்னை மயக்கவந்த அப்சரப் பெண்களுக்குத் தன் ஆற்றலை அறிவிக்க அவர் இவளைப் படைத்தார் என்றும் கூறுகின்றார்கள். ஒளி வீசும் சந்திரனே அல்லது சிங்கார தெய்வமான மன்மதனே அல்லது இளவேனிற் கால தெய்

வமான வசந்தனே இவளைப் படைக்கும் திறம் வாய்ந்தவர்களாக இருக்க முடியுமே தவிர மறைகளை ஓதிச் சுகங்களை மறந்திருக்கும் ரிஷிக்கு இவ்வளவுச் சிங்காரமான உருவத்தைப் படைக்க முடியுமா?'' என்று அரசன் எண்ணினன். அரசன் இப்படி ஊர்வசியிடம் காதல் கொள்ள அவளும் அரசன்மீது அளவற்ற காதல் கொண்டாள்.

ஊர்வசி தன் தோழிகள் எவ்விடத்திலிருக்கின்றார்கள் என்று வினவ, "அங்கே ஹேமகூட மலையில் கிரகணத்தால் விடுபட்ட சந்திரனை நோக்குவதுபோல் அவர்கள் உன்னையே நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். உன்னை ஒரு தடவைப் பார்த்தவர்கள் கூட உன்னையே பார்த்துக் கொண்டிருக்க விரும்புவார்களே! அப்படியிருக்க உன்னுடன் பழகின தோழிகள் எவ்வளவு ஆவலுடன் இருக்க மாட்டார்கள்'' என்று அரசன் காதலால் கனிந்த மொழிகளுடன் கூறினன். அரம்பை முதலிய அப்சரப் பெண்களும் அரசனை வாழ்த்தித் தோழியைக் கண்டு களித்தார்கள்.

அச்சமயத்தில் சித்திரரதன் என்ற கந்தர்வ அரசன் விமானத்தில் வெகு வேகமாக வந்து அரசனை நோக்கி "இந்திரன் கந்தர்வ சேனையை ஊர்வசியைச் சிறைமீட்க அனுப்பினன். நாங்கள் வருவதற்கு முன் அவள் உன்னல் விடுவிக்கப் பட்டதில் மிகுந்த மகிழ்ச்சி'' என்று அரசனுடைய வீரத்தைப் பாராட்டினன். அரசனும் "இந்திரனைச் சார்ந்தவர்கள் வெற்றியடைவது அவனுடைய ஒப்பற்ற வீரத்தாலல்லவா? சிங்கம் கர்ஜனை செய்யும்பொழுது குகையிலிருந்து எழும் எதிரொலியே யானைகளை வீழ்த்திக் கொன்றுவிடுமல்லவா?'' என்று மறுமொழியளித்தான். பிறகு அச் சித்திரரதன் அப்சரப் பெண்கள் யாவரையும் சுவர்கத்தை நோக்கி ஆகாய மார்க்கமாக அழைத்துச் சென்றான். அரசன் "எப்படி அன்னப் பறவை மூக்கினல் தாமரைக் கிழங்கின் நூலை யிழுத்துக்கொண்டு பறந்து செல்லுமோ அப்படி இவள் வானுலகம் போகும்பொழுது இதயத்தையும் இழுத்துக்கொண்டு போய்விட்டாள்'' என்று வருந்தினன்.

ஊர்வசி வருதல்

அரசன் தன் ஊருக்கு வந்ததுமுதல் ஊர்வசியை நினைத்து நினைத்து வருந்தினன். "அவளைப் பார்த்த நாள் முதல் அந்த சுரலோக சுந்தரீ மன்மத பாணங்களால் பிளந்து உண்டாக்கப்பட்ட வழியால் என் மனதில் நுழைந்து விட்டாள்'' என்று அவளை நினைத்து நினைத்து நெஞ்சுருகித் துயரத்தில் ஆழ்ந்திருந்தான். அவனும் அவனுடைய உயிர்த் தோழன் விதூஷகனும் லதாமண்டபத்

தில் இருந்தபொழுது ஊர்வசியும் சித்திரலேகையும் ஆகாய மார்க்கமாக வந்து திரஸ்கரிணி என்ற மந்திர வித்தையால் தங்களைப் பிறர்கள் பார்க்க முடியாதபடி மறைத்துக் கொண்டார்கள். அரசனும் விதூஷகனும் இருந்த இடத்தினருகில் வந்தார்கள். விதூஷகன் அரசனுடைய துயரத்தை மாற்ற "கனவிலாவது அவளைக் காணலாம். உறங்கினால் கனவு ஏற்படும். இல்லாவிட்டால் அவளுடைய அழகை ஓவியமாக எழுதினால் துன்பம் நீங்கி இன்பம் ஏற்படும்" என்றான். அரசன் "காதலால் வருந்தும் எனக்கு உரக்கம் வருமா? அவளை நினைத்தாலே கண்ணீர் சுரக்கும் கண்களுடைய அழகை எப்படி அவளுடைய அழகை ஓவியத்தில் அமைக்க முடியும்" என்றான். அப்பொழுது ஊர்வசி ஒரு பூர்ஜ இலையில் தன் காதலை எழுத்துக்களால் அறிவித்து அந்த இலையை அவர்களருகில் விழச்செய்தாள். அரசன் அதைப் படித்து அளவற்ற இன்பத்தை அடைந்தான். அப்பொழுதுச் சித்திரலேகை மந்திர வித்தையை விலக்கி அரசன் முன் தோன்றினாள்.

"முன் அசுரர்களிடமிருந்து என் தோழியைக் காப்பாற்றினீர்கள். இப்பொழுது மன்மதன் கையில் சிக்கிக் கொண்ட அவள் உங்களைச் சரணடைகின்றாள்" என்று சாதுர்யமாகக் கூறினாள். அரசன் "எப்படியாவது நீ உன் தோழியை அழைத்து வரவேண்டும்" என்று கூறவே, ஊர்வசியும் மந்திர வித்தையை நீக்கி அரசன் முன் தோன்றினாள். அரசனும் ஊர்வசியும் ஒருவரை யொருவர் கண்டு பேசி அளவற்ற இன்பத்தை அடைந்தார்கள். அச்சமயத்தில் தேவதூதன் வந்து ஊர்வசியை நடனத்திற்கு அழைத்துவர இந்திரன் கட்டளை என்று தெரிவிக்கவே ஊர்வசி அரசனிடம் பிறகு வருவதாக வாக்களித்துத் தேவதூதனுடனும் சித்திரலேகையுடனும் சுவர்க்கத்திற்குச் சென்றாள்.

(தொடரும்)

தாத்தா:—ஏண்டா, இப்படி முழிச்சிண்டு நிக்கறே.

பையன்:—இல்லை...தாத்தா கடையிலே சில்லறை மாத்தச்சே 'நயினா பைசை' கேட்டேன். திடீர்னு கன்னத்திலே அடிவைத்து விட்டான் தாத்தா...உம்...

தாத்தா:—நயினா பைசாவுமில்லே... உங்க பாட்டன் பைசாவுமில்லே. நயாபைசான்னு கேட்டுஅழறத்துக்கென்னடா?

பையன்:—ஐய!...நையா பைசாவா இதோ ஓட்றேன் தாத்தா...

ஹிந்து சட்ட மாறுதல்கள்

ஸ்ரீமான். P. M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B.A., M.L.
(Retd. Dist. Judge.)

1956-ம் வருஷத்திய நெ. 25 சட்டம் நமது இந்தியா தேசத்திலுள்ள ஹிந்துக்களுக்கு அன்வயிக்கும். அந்தச் சட்டத்திய நிபந்தனைகளை சென்ற மூன்று இதழ்களில் பரக்க எடுத்துக் காட்டினேம்.

1954-ம் வருஷத்தில் டில்லி பார்லிமெண்டார் விசேஷ விவாகச் சட்டமென்று ஒரு சட்டத்தை பாஸ் செய்தார்கள். அது 1954-ம் வருஷத்திய நெ. 43-ம் சட்டம். அது விசேஷ விவாக சட்டம். 1954 (The special marriage Act, 1954) என்று வழங்கப்படுகிறது. அது இந்தியா தேசத்தில் வசிக்கும் எல்லா ஜனங்களுக்கும் அன்வயிக்கும். அதன்படி எந்த மதத்திற் சேர்ந்திருந்தாலும் ஒரு ஸ்திரீயும் ஒரு புமானும் கேவலம் ரிஜிஷ்டர் செய்துகொண்டு அதன் மூலமாகவே மற்றெரு சடங்கொன்றுமில்லாமல் தம்பதிகள் ஆகலாம்.

இந்தச் சட்டத்தின்படி விவாகம் செய்துகொள்ளுபவர்கள் கிழ்க்கண்ட 5 நிபந்தனைகளைப் பெற்றிருக்கவேண்டும். அதாவது,

1. அவர்களுக்கு அதற்குமுன் விவாகமாகிய பார்யையோ பர்த்தாவோ உயிருடன் இருக்கக்கூடாது;

2. அவ்விருவர்களில் ஒருவரும் பைத்தியமாகவாவது புத்தி அற்றுவது இருக்கக்கூடாது;

3. புருஷனுக்கு 21 வயதும் ஸ்திரீக்கு 18 வயதும் நிரம்பியிருக்கவேண்டும்;

4. அவர்கள் பரஸ்பரம் விவாகம் செய்துகொள்ளக்கூடாத முறையில் இருக்கக்கூடாது, (எந்த முறைகள் விவாகத்திற்கு விரோதமென்பதைச் சட்டத்தில் 1-வது ஷெட்யூலில் 1, 2 பாகங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறைகள் ஹிந்து விவாக சட்டத்தில் நிஷேதிக்கப்பட்ட முறைகளாகவே பெரும்பாலுமிருப்பதனுல் அவைகளை இந்த வியாஸத்தில் விவரிக்கவில்லை.)

5. விவாகம் இந்தியாவிலில்லாமல் வெளிநாட்டில் நடப்பதானுல், அவர்களிருவரும் இந்தியா தேசத்து பிரஜைகளாக இருந்து வெளிநாட்டில் குடியேறினவர்களாக யிருக்கவேண்டும்.

ஷை ஐந்து விஷயங்களும் இசைந்திருந்தால், அந்த ஸ்திரீயும் புருஷனும் இந்தச் சட்டத்தின்படி விவாகம் செய்துகொள்ளலாம். இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு விவாக உத்யோகஸ்தர் [Marriage officer] நியமிக்கப்பட்டிருக்கிறுர். விவாகம் செய்துகொள்ள இச்சைப்படுபவர்கள் இருவரும் ஷை உத்யோகஸ்தருக்குக் கல்யாணத்திற்கு 30 நாட்களுக்கு முன் ஒரு நோடீசு கொடுக்கவேண்டும். அவர் ஷை நோடீசைத் தன் ஆபீசில் பிரசுரம் செய்வார். அப்படி உத்தேசிக்கப்பட்ட விவாகத்திற்கு யாராவது ஆக்ஷேபணை தாக்கல் செய்யலாம். அவ்வாக்ஷேபணையை விசாரித்து மேற்கூறின ஐந்து நிபந்தனைகளில் ஏதாவது குறையிருந்தால் அவர் கல்யாணத்தைத் தடுத்துவிடலாம். அப்படி ஒரு குறையுமில்லாத பக்ஷத்தில் அவர் கல்யாணத்திற்கு

அனுமதிக்கவேண்டும். கல்யாணமானது அவ்வுத்யோகஸ்தர் முன்னல் நடக்க வேண்டும். அதன் நிகழ்சியாதெனில்; வதூ வராள் இரண்டு பேர்களும் உறுதிமொழிகள் கொடுக்கவேண்டும். அதில் தனக்குஅந்தகாலத்தில்பார்யையோ,பர்த்தாவோ இல்லை என்றும், தனக்குச் சட்டப்படி வயது நிரம்பியிருப்பதாயும், கல்யாண நிஷேத முறையில் தாங்கள் இருவரும் இல்லையென்றும், இந்த விஷயங்களில் தாங்கள் சொல்லுவதில் ஏதாவது பொய்யிருந்தால் தாங்கள் சட்டப்படி ஜெயில் வாசத்திற்கும் அபராதத்திற்கும் ,பாத்திரர்களாகுவோமென்று அறிந்திருப்பதாகவும் அவர்கள் உறுதியாக எழுதி மூன்று சாக்ஷிகள் முன்னிலையிலும் விவாக உத்யோகஸ்தரின் முன்னிலையிலும் கையெழுத்துச்செய்யவேண்டும். அதன் பிறகு அவ்வதூவரர்களிருவரும் ஒவ்வொருவரும் மற்றெருருவருக்கு மேற்படியார் முன்னிலையில் "நான் உம்மை என்னுடைய சாஸ்திரீயமான பார்யையாக (பர்தாவாக) ஸ்வீகரிக்கிறேன்" என்று வாய்மொழியாகச் சொல்லவேண்டும். இத்துடன் விவாக பூர்த்தி. விவாக உத்தியோகஸ்தர் விவாகத்தை தன் ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொண்டு தம்பதிகளுக்கு விவாக சர்டிபிகேட்டு அளிப்பார். இந்த சர்டிபிகேட்டு அவர்களுடைய விவாகத்தையும் அவர்களின் பர்த்ருபார்யா தன்மையையும் உலகத்தாருக்குக் காட்டும். அது கோர்ட்டுகளில் யாதொருதடையும் விவாதமும் இன்றி அங்கீகரிக்கப்படும்.

இவ்விவாகத்திற்கு ரிஜிஸ்டர் விவாகமென்று பெயர். இதற்கு எவ்வித பணச்செலவும் இல்லை. பந்துக்களேயும் நண்பர்களேயும் அழைத்து மரியாதைகள் செய்யவேண்டியதில்லை. ஆனல், அப்படி ஏதாவது செய்தால் அதற்கு ஷை சட்டத்தில் தடையாதும் கிடையாது.

மற்றெருரு விஷயமும் கவனிக்கத்தக்கது. இந்த 1954-ஆம் வருஷத்திய 43-நெ சட்டம் 10-11-54 அன்று அமுலுக்கு வந்தது. அந்த தேதிக்கு முந்தியாகிலும் பிந்தியாகிலும் நடந்த விவாகங்களெல்லாம் இந்தச் சட்டத்தின் கீழ் ரிஜிஸ்டர் செய்துகொண்டு சர்ட்டிபிகேட்டு பெறலாம். இதன்படி சுயமரியாதைக் கட்சியாரும் தங்களுக்கு இஷ்டமான வழியில் விவாகம் செய்துகொண்டு அதை ரிஜிஸ்டர் செய்வித்தால் வழி அல்லது நிகழ்ச்சி சாஸ்திர சம்மதமாக இல்லாமலிருந்தாலும், ரிஜிஸ்டர் செய்வதினல் அது நேரான விவாகமாகும்.

இந்த 1954-ம் வருஷத்திய 43-நெ. சட்டத்தின்படி ஆகிய ரிஜிஸ்டர் விவாகத்திற்கும் வேறு முறையில் ஆகும் விவாகத்திற்கும் மூன்று விஷயங்களில் வாசி யிருக்கிறது.

1. ஹிந்து அவிபக்த குடும்பத்திய ஒரு புருஷன் இந்தச் சட்டத்தின்படி விவாகம் செய்துகொண்டால், அக்காரணத்தினலேயே அவன் குடும்பத்திலிருந்து வேறுபட்டவனுக ஆகிவிடுவான். மற்றவர்களுடன் அவிபக்தமாக இருக்கமாட்டான்.

2. ஆனல், மற்றப்படி அவனுக்கு (அல்லது அவளுக்கு) சொத்து உரிமைகளிருக்கும்.

3. இந்தச் சட்டப்படி ரிஜிஸ்டர் விவாகமான தம்பதிகளுக்கு வார்சுகள் (தங்களுக்கு பிறகு சொத்தை அடையுமவர்கள்) ஹிந்து சாஸ்திரப்படியோ அல்லது 1956-ம் வருஷத்திய 30-நெ. சட்டத்தின்படியோ இல்லாமல் Indian succession Act. 1925-ம் வருஷத்திய 25-நெ. சட்டத்தில் கூறின கிரமப்படி யிருப்பார்கள்.

1954-ம் வருஷத்திய நெ. 43-வது சட்டத்திலும் அச்சட்டத்தின்படி நடந்த விவாகங்களை ரத்து செய்யவும், தம்பதிகளை வேறு படுத்தி தனித்தனியாக இருக்கும்படிச் செய்யவும், மனோவர்த்தி முதலானவை கொடுக்கும்படி செய்யவும் ஆதாரங்களிருக்கின்றன. அவைகள் ஹிந்து விவாக சட்டத்தின்படிதான் பெரும்பாலுமிருப்பதனல் அவைகளை மறுபடி இவ்விடம் விவரிக்கவில்லை. ஆனல், முக்கியமான விஷயமொன்று வேறொரு சட்டத்திலுமில்லாமல் இந்த 1954-ம் வருஷத்திய நெ. 43-ம் சட்டத்தில் உள்ளது கவனிக்கத்தக்கது. அதாவது; தம்பதிகள் இரண்டு பேர்களும் இஷ்டப்பட்டு ஒருவர் மற்றொருவர் பேரில் யாதொரு தோஷமும் ஆரோபிக்காமல் விவாகத்தை கோர்ட்டு மூலமாக ரத்து செய்துகொண்டு தங்களுடைய பரஸ்பர தாம்பத்யத்தை முடித்துகொள்ளலாம். தாங்களிருவரும் விவாகத்தை சேதிக்க இஷ்டப்பட்டதாகக் கோர்ட்டுக்கும் மனு செய்துகொள்ளவேண்டும். கோர்ட்டார் அவர்களுக்கு தங்கள் நிலைமையைப்பற்றி நன்ருக யோசித்து பரிசீலிக்க 1 வருஷம் கெடுவு கொடுக்கவேண்டும். அந்த ஒரு வருஷத்திற்குப் பிறகு அவர்கள் கோர்ட்டில் ஆஜராகி ரத்துதான் செய்ய வேண்டுமென்று கோரினல் கோர்ட்டார் ரத்து செய்யக் கடமைப்பட்டவர். இந்த 1 வருஷ கெடுவானது தம்பதிகள் தீர்க்காலோசனை செய்து தங்கள் நிலைமையை சரிவரபார்த்து கொள்ளுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சோவியத் ரஷியா தேசத்தில் விவாகமும் எளிதில் அதாவது ரிஜிஸ்டர் மூலமாக நடக்கும். விவாகரத்தும் எளிதில் தம்பதிகளில் யாரொருவருக்கு இஷ்டமில்லாமலிருந்தாலும் அந்நபரின் கோரிக்கைப்படி ஆகிவிடும். மற்ற எல்லா தேசங்களிலும், 'கல்யாணம் ஆயிரம் காலம் பயிர்' என்று நாம் சொல்வதுபோல், வியக்தி வாழ்க்கைக்கே யல்லாமல் சமூக வாழ்க்கைக்கும் விவாகம் ஆகிவிட்டால் அது லேசில் பங்கமாகக் கூடாதென்றும் அது பங்கபபடுத்த சில முக்கியமான குற்றங்கள் ஒருவர் மற்றொருவர் பேரில் சாட்டி ருஜு செய்ய வேண்டுமென்றும், அதுவரையில் தம்பதிகள் ஒருவருக்கொருவர் பந்தப்பட்டே இருக்கவேண்டு மென்றும் நீதி முறைகள் கோஷிக்கின்றன:—இந்த நியாயத்திற்கு ஷைசட்டத்தின் முறை முறண்பாடாக இருக்கிறது.

நமது இந்தியா தேசம் சுவதந்திரம் பெற்ற 1947-ம் வருஷம் முதல், முக்கியமாய் பிரஜா சுவாதந்திரியமென்று ஸ்திரப்படுத்தப்பட்ட 1950-ம் வருஷத்திலிருந்தும் ஸ்திரீகளைப் பற்றின பல சட்டங்கள் வந்திருக்கின்றன. அவைகளுடைய முக்கிய உத்தேசம் ஸ்திரீகளுடைய தாழ்ந்த நிலையை உயர்த்தி புருஷர்களுடன் சமானமாகச் செய்வது. நம் தேசத்தின் பூர்வ சரித்திரத்தைப் பார்த்தால் வேதத்தின்காலத்தில் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கு சமானமான சுவாதந்திரியம் இருந்தது. இதற்கு வேதத்தின்

பல ரிக்குக்களிலேயே தகுதியான சான்றுகள் இருக்கின்றன. அந்நாட்களில் பல ஸ்திரீகள் வேத ரிக்குகளை பிரகடனே செய்த தாகவும் ஸ்திரீகளும் வேதாத்யயனம் செய்துகொண்டிருந்ததாக வும் தெரிகிறது. விஸ்வர என்பவள் ஒரு ரிக்கை பிரகடனே செய்த தாகவும், லோபாமுத்ரை ரிக்வேதத்திய ஒரு ரிக்கைச் சொன்ன தாகவும், ரிஷி யாக்ஞயவல்கியரின் பத்நி மைத்ரேயி தன் புருஷ னுடன் தத்வ வாதங்கள் செய்ததாகவும், கார்கி என்பவள் ஜனக ராஜாவின் ஆஸ்தானத்தில் ரிஷிகளுக்கு நடந்த வாதபிரதிவாதங் களில் அன்வயித்து கம்பீரமாய் தன் கருத்துக்களை உரைத்ததாக வும் தெரிகிறது. பராசர மாதவீய கிரந்தத்தில் கூறப்பட்ட ரிஷி யமருடைய ஒரு ச்லோகத்திலிருந்து அக்காலத்தில் ஸ்திரீ களும் வேதாத்யன சம்பந்நர்களாக இருந்தமை யுணரலாம்.

“புரா கல்பே குமாரீணும் மௌஞ்ஜபந்த நமிஷ்யதே!
அத்யாபநம்ச வேதாநாம் சாவித்ரீவதநம்ததா.”!!

ஆதிரிஷிகளில் ஒருவரான ஹரிதரும் ஆண்களுக்குள்ள நான்கு ஆச்ரமங்களும் பெண்களுக்குமுண்டென்று சொல்லியிருக்கிறார்.

காலதிரமத்தில் உபநயநமும், வேதாத்யநமும் ஸ்த்ரீகளுக்கு இல்லாமல் போயிவிட்டன. எப்பொழுது வேதபடநமும் அதன் அர்த்த சிந்தனமும் இல்லாமல் போயவிட்டதோ, அதிலிருந்தே ஸ்திரீகளுடைய உரிமைகளும் சங்கத்தில் அவர்களுக்கதுவரை யிருந்த உத்துங்க பதவியும் மறைந்தன. ஏனெனில், அப் போதிய அபிப்பிராயங்களின்படி வேதப்படிப்பில்லாததினுல் ஸ்திரீகளுக்கு சாரா சார விவேசனே யுக்தாயுக்த அறிவு இல்லை. அதனுல் அவர்கள் சுவதந்திரத்தை இழந்தவர்களாயும் புருஷ னுக்குக் கீழ்ப்பட்டு அவனுல் ரக்ஷிக்கப்படுபவர்களாயும் ஆகி விட்டார்கள். ஸ்ம்ருதி கர்த்தாக்கள் தாங்களிருந்த காலத்தில் ஜனங்களுடைய பழக்கவழக்கங்களையும் ஆசாராதிகளையும் எழுதி வைத்திருக்கிருர்கள். மனுஸ்ம்ருதியின் ஸ்திரீதர்ம பிரிவில், ஸ்திரீ தன் பால்யத்தில் பிதாவசத்திலும், யௌவனத்தில் பர்த்தாவசத்திலும், அவன் காலம் சென்ற பிறகு புத்ரர்கள் வசத்திலும் இருக்கவேண்டும்; எப்பொழுதும் ஸ்வேச்சையுடன் இருக்க இயலாது,

“பால்யே பிதுர்வசேதிஷ்டேத்
பாணிக்கிரஹஸ்யயௌவநே,
புத்ராணும் பர்தரிபிரேதே
நபஜேத் ஸ்திரீ ஸ்வதந்திரதாம்.”

என்றுவ்ளது.

ஸ்திரீகளுக்கிந்தத் தாழ்மை வந்ததத்குள்ள காரணங்களில் முக்கியமானது நமது தேசத்திற்கடிக்கடி அன்யர்கள் வந்து போர்செய்ததென்று சொல்லப்படுகிறது.

பிராசீன காலத்திய க்ரந்தங்களில் ஸ்திரீகள் பலர் விவாக மில்லாமலே இருந்ததாகவும், ஸ்திரீ தன் இஷ்டப்படி புருஷனே வரித்து மணம் செய்து கொண்டதாகவும், பால்ய விவாகங்கள் இல்லாமல் யுக்த வயதுவந்த பிறகுதான் விவாகமென்றும் ......முதலான விஷயங்கள் புலப்படுகின்றன.

(தொடர்ச்சி 24-ம் பக்கம்)

சப்பாணி எழுத்தாளன்

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்.

“மலைச்சிகரங்களைக் கிழித்துக்கொண்டு நீர் அருவி தன் முழு வேகத்துடன் ‘ஹோ’ என்ற பேரிரைச்சலைக் கிளப்பியவாறு உருண்டோடியது. பூமியைத் தொடும் நீர்த்திவலைகள் நுரையைக் கிளப்பிக்கொண்டு உடைந்து சிறுசிறு அலைகளாய் கரையைத் தொட்டுதொட்டு துள்ளிப் பெருகியது. பக்ஷிஜாலங்கள் தங்கள் சிறு சிறகுகளால் நீரைத் தட்டி குதூகலத்துடன் பறந்து விளையாடின. அருவியின் ஓசையை ச்ருதியாய் வைத்து குயில்கள் தங்கள் இனிய கீதத்தை மெய்மறந்து இசைத்தன. ஆனால்...”

மனோ ராஜ்ய அரசனாய் சஞ்சரித்துக்கொண்டிருந்த ரகுவின் பேனா கைகள் ‘ஸடன் பிரேக்’ போட்ட கார் நிற்பதுபோல் பேனா மேலே ஓடமறுத்து நின்றது. காரணம்...“பிள்ளையாரப்பா பெரியப்பா புத்தி கொஞ்சம் சொல்லப்பா...பழனி யாண்டவா, பள்ளம் தோண்டவா...பந்தல் போடவா, அண்ணாமலைக்கு அரோஹரா... கோவிந்தா...கோவிந்தா... அவ்வளவுதான் ரகுவின் பொறுமை தளர்ந்தது. ருத்ரமூர்த்திபோல் கண்கள் சிவக்க, உதடுகள் துடிக்க, “தரித்ரங்கள். சனியன் பீடைகள். திருவிழாவாம் தேர் கடையாம். பாழும் பந்தல் போட்டாலும் போட்டான் என் ப்ராணன்தான் போகிறது. மூதேவிகள்...கூச்சல் போடாது குதித்தால் குடியா முழுகிவிடும். ஆகட்டும்...இன்று பிச்சிவிடுகிறேன்... கால் கைகளை முறித்து விடுகிறேன். இன்று விழும் உதையுடன் இனி இந்த பக்கமே திரும்பாத வழி செய்து விடுகிறேன்” என்று ஆக்ரோஷத்துடன் தடியைத் தூக்கிக்கொண்டு ஓடும் சமயம் திரும்பவும் அதே குழந்தைகளின் இனியகோஷம் அவன் கொதிப்பை மேலும் கிளப்பியது. தடியுடன் வீதியை நோக்கி விரைந்தான்.

முக்கண் மூர்த்திபோல் கண்களில் தீப்பொறி பறக்க ஓடி வரும் மகனைக் கண்ட பார்வதி திண்ணையில் இருந்து துள்ளி எழுந்தாள். “என்னப்பா இது என்ன தாண்டவம், எங்கே இப்படி ஓடிவருகிறாய்” என்று பதறியவாறு கேட்டாள்.

“எங்கேயா...இரு...இரு முதலில் காலை முறித்துவிட்டுதான் மறுகாரியம்...தரித்திரங்கள்...பீடைகள்...திருவிழாவாம் திருவிழா...என் ப்ராணன்தான் போகிறது” என்று திமிறியவாறு படியை தாண்டினான்.

ஒரு நொடியில் விஷயத்தை அறிந்த பார்வதி மகனின் கையில் இருந்த தடியை பிடுங்கி எறிந்துவிட்டு “ரகு இது என்ன வீராவேசம்? மூளை நன்றாய்தான் வேலை செய்கிறது. குழந்தைகள் குதூகலமாய் ஓடியாடுவதைப் பார்த்து பூரிக்காது காலை முறிக்கிறானாம். கையை உடைக்கிறானாம். இந்த தேர் திருவிழாவால்தான் நீ இன்று ஒரு எழுத்தாளனாய் ப்ரகாசிக்கிறாய் என்று அறிந்தால் இப்படி துள்ளமாட்டாய்.”

"என்ன...அழகுதான். திருவிழாவிற்கும், எனக்கும் என்ன சம்பந்தம்? மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதுப் போல்தான் இருக்கிறது உன் விஷயம். நகரும்மா. என் அறை ஜன்னல் கிழே செய்யும் ரூட்டி சகிக்கவில்லை. உதைத்தால் தவிர என் ஆத்திரம் தணியாது, வேலையாகாது'' என்று இறைந்தான்.

இதை கவனித்த சிறுவர்கள் ஏககுரலில் "பிள்ளையாரப்பா... பெரியப்பா...அந்த ஐயாவுக்கு சொல்லப்பா, புத்தி கொஞ்சம் சொல்லப்பா'' என்று கத்தி குதித்து எக்காளமிட்டார்கள்.

இதைப் பார்த்தவாறு வீதியில் வந்த பக்கத்து வீட்டு கிழவர் "என்ன ரகு! நரஸிம்மாவதாரம்போல் இருக்கிறாயே...என்ன விஷயம்?''

"அப்படி கேளுங்கள் தாத்தா...குழந்தைகள் சந்தோஷமாய் கத்துவது அவனுக்குத் தொந்தரவாம். இந்த வீதி இவன் ஒருவனுக்குதான் சொந்தம்போல், அவர்கள் காலை, கையை முறித்துவிடப் போகிறானாம். பாருங்கள், எழுத்தாளனின் மூளை எப்படி வேலை செய்கிறது. எந்த தேர், திருவிழாவால் தான் மனிதனானானோ அதை அறியாததால்குதித்துத் தாண்டவம் ஆடுகிறான்''.

"என்ன...என்ன, ரகு ஒரு மனிதனாக...திருவிழா காரணமா... அது என்ன விஷயம்?''

"சமயம் வரும்போதுதானே சொன்னால் ரசிக்கும். ரகு உட்கார். உன் சரித்திரத்தையே கேட்டு அதையே ஒரு கதை எழுதி விடலாம்''

ரகுவின் தகப்பனார் ரயில்வேயில் வேலையாய் இருந்தார். அதில் எனக்கு ரொம்ப சந்தோஷம். ஊர் ஊராய் மாற்றுவார்கள். வருஷம் ஒருமுறை பாஸ் வாங்கி ஊர் சுற்றலாம் என்று. அந்த குஷியில் என் வாழ்க்கை வெகு நன்றாய்தான் சென்றது. என் கணவரும் ஒரு குறையின்றி என்னை கண்ணாய்தான் காத்தார். சில வருஷங்கள் அப்படியே உருண்டது. ஆனால் எனக்குதான் ஒரு குறை. பெண்கள் மணம் ஆன மறுவருஷமே தாய் ஸ்தானம் அடையும் இந்த காலத்தில் நான்மட்டும் விலக்காய்...வருஷம் எட்டு ஆகியும் அந்த பதவி பெறவில்லையே என்று. என் குறை மலையாய் வளர்ந்தது.

ஊரில் இருக்கும் பாட்டிமார்கள் சும்மா இருப்பார்களா. என்னை பல விருதங்கள் செய்யத் தூண்டினார்கள். "எத்தை தின்னால் பித்தம் தெளியும்'' என்று இருக்கும் என் உள்ளம் யார் எதைச் சொன்னாலும் உடனே செய்யத் தூண்டியது. பாவம் நான் கவலைபடாது இருந்தால் போதும் என்று இருக்கும் என் கணவர் என் இஷ்டங்களை உடனே பூர்த்தி செய்துவந்தார். ராமேஸ்வரம் உள்பட பல தீர்த்த யாத்திரை சென்றோம். கல்லாய் இருந்த கடவுளின் உள்ளமும் கனிந்து இந்த ப்ரபுவை எங்களுக்கு அளித்தார். அளித்தாரே! ஆரோக்யமான குழந்தையாய் அளிக்கக்கூடாதா. மண்ணில் விழுந்த அன்று முதல் ஒரே நோய் தான். நிம்மதி என்பதே இல்லை. வேண்டும் வேண்டும் என்று தவமிருந்து இப்படி ஒரு ரோகிஷ்டி குழந்தை பிறந்ததைவிட

குழந்தை இல்லாது தவித்த நாளே மேலாய் தோன்றியது. பொழுது விடிந்தால் அஸ்தமித்தால் புட்டி ஏந்திய கையுடன் தலைவிரிகோலமாய் டாக்டர் வீடு ஓடதான் சரியாய் இருக்கும். என் நிலையைக்கண்டு டாக்டரும் பரிதாபப்படுவார். ஐந்து வயது ஆகியும் நடக்க சிவன் இன்றி சப்பாணியாய் இருக்கும் குழந்தையைப் பார்த்தால் எந்த தாயின் மனம்தான் வாடாது?

ஒரு சமயம் உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்காக போய் இருந்தேன். அந்த சமயம் அங்கு ப்ரம்மோற்சவம். நான் இறங்கி இருந்த வீட்டு வாசலில் பந்தல் ப்ரம்மாண்டமாய் போட்டு இருந்தார்கள். கேட்கவேண்டுமா குழந்தைகளின் குதூகலத்திற்கு? திருவிழா, உற்சவம் என்றால் அவர்களுக்கு தனி கொண்டாட்டம் இல்லையா? உறவினர் தொந்தரவின் பேரில் நான் உற்சவத்திற்கு பத்து நாளும் அங்கே தங்கினேன். தினம் பொழுது போக்கிற்காக திண்ணையில் என் அருமை சப்பாணி பிள்ளையுடன் உட்கார்ந்து இருப்பேன். இவன் வயது குழந்தைகள் ஆடி ஓடி குதூகலமாய் சிட்டாய் பறந்து விளையாடுவதைப் பார்த்தால் ஒரு பக்கம் வேதனையாய்பிடுங்கும். பாவம் இவனோ அவர்கள் ஓடுவதை பார்த்து இருந்த இடத்திலேயே கையைக்கொட்டி கூச்சலிட்டு ஆரவாரம் செய்வான்....ஓட காலில் சிவன் இருந்தால்தானே? எனக்கு துக்கமாய்வரும். வேண்டாத கடவுளை எல்லாம் வேண்டித்தவித்தேன். ஆனால் சிரித்து விளையாடக்கூட இஷ்டப்படாத குழந்தை அந்தமட்டும் இவ்வளவாவது செய்கிறதே என்று ஒரு புரம் மகிழ்ச்சி.

சப்பாணி ஆனாலும் ரகுவின் முகத்தில் எடுப்பான கம்பீரக் களை உண்டு. அவன் கண்களுக்கு பார்ப்பவர்களைக் கவரும் சக்தி இருந்தது, அதனாலோ என்னவோ விளையாடும் அவ்வளவு குழந்தைகளும் சப்பாணி என்று அலட்சியம் செய்யாது இவன் அருகில் வந்து வலுவில் இவனுடன் விளையாடுவார்கள். அதன் விளைவோ...இல்லை என் அதிர்ஷ்டமோ...ரகு உட்கார்ந்த இடத்தில் இருந்து டேக்கி டேக்கி குழந்தைகள் கூட்டத்துடன் கலந்து களிக்கத் தொடங்கினான். புஷ்பம் உதிர்வதுபோல் ஒரு வாரம் ஓடி மறைந்தது. என் ஆச்சர்யத்தை என்ன சொல்வது. டேக்கத் துடங்கிய குழந்தை மெள்ள பந்தல் காலை பிடித்துக்கொண்டு எழுந்து நிற்கவும் ப்ரயத்தனபடத் துடங்கினான். ஆனால்...உற்சவம் முடிந்துவிடவே பந்தல்காரன் தன் கடமையில் கருத்தாய் பந்தல்களைப் பிரித்துக்கொண்டு அந்த இடத்தை சூன்யமாய்க்கி விட்டுச் சென்றுவிட்டான். பாவம் குழந்தைகள் கவலை தோய்ந்த முகத்துடன் பந்தல் இருந்த இடத்தைப் பார்த்து ஏங்கி நின்றனர். எனக்கோ எதையோ பறிகொடுத்ததுபோல் துக்கம் தொண்டையை அடைத்தது.

அவ்வளவுதான் "ருசிகண்ட பூனை உறியைத்தாவிற்றும்" என்பதுபோல் என் கணவர் ஆபீஸுக்கு மூன்று மாதம் லீவ் போட்டுவிட்டு, எந்த எந்த ஊரில் திருவிழா நடக்கிறதோ அந்த அந்த ஊர்களுக்கு குழந்தையுடன் போகக்கிளம்பினோம். நாங்கள் ஸ்வாமியை தரிசிக்கத் தவறினாலும் குழந்தைகள் பந்தல் அடியில் விளையாடும் இடத்துக்கு போகமட்டும் தவறமாட்டோம். டாக்ட

ரின் வைத்தியத்தைவிட இயற்கைக்கும், குழந்தைகளுக்கு ஏற்படும் உற்சாகத்திற்கும் இவ்வளவு சக்தி இருப்பதை கண் கூடாய் ரகு விஷயத்தில் பார்த்தோம். ஒரு மாதத்தில் குழந்தை கையைப் பிடித்துக்கொண்டு நடக்கத் துடங்கினான். அவன் பிறப்பதற்கு எடுத்துக்கொண்ட விருதங்கள், யாத்திரைகளைவிட, அவன் நடக்க வேண்டிக்கொண்ட ப்ரார்த்தனைகளுக்கும், சென்ற திருவிழாக்களும் எண்ணிக்கையே இல்லை. அது கடவுளின் க்ருபையோ, இயற்கையின் சக்தியோ தெரியாது. எங்கள் கண்மணி சீக்கிரத்திலேயே நன்றாய் நடக்கத் தொடங்கிவிட்டான். அதைவிட மகிழ்ச்சி எங்களுக்கு என்ன இருக்கிறது'' என்று பார்வதி கதைபோல் கூறி முடித்தாள்.

''அட பரவாயில்லையே என் சரித்திரம் பலேஜோராய் இருக்கிறதே...ஏன் அம்மா இவ்வளவு நாள் சொல்லவே இல்லை'' என்று கொக்கரித்தான் ரகு.

''ஊம்...காரணமில்லாது சொன்னால் இவ்வளவு ருசியாய் ரசிப்பாயா...அதோ பார் உன் அருமைப் பெண். ஜுரம் விட்டும், ஒரு மாதமாய் படுக்கையுடன் முடங்கி இருந்த குழந்தை இந்த நான்கு நாளாய் விளையாடும் குஷியில் உள்ளே நிற்பதே இல்லை. நாலு நாளில் உடம்பு எப்படி தெளிந்து இருக்கிறதுபார்...சந்தோஷம் சகலபலம் என்பது பொய்யா.''

''ஆமாம், நீ சொன்ன பிறகுதான் மூளையில் உறைக்கிறது. என்ன மூடகாரியம் செய்ய இருந்தேன்? அது மட்டும் பிழைத்தேன். சற்று முன் பேயாய் இருந்த நான் மனிதனாய் மாறிவிட்டேன். ஐயோ...நானும் சிறுபிள்ளையாகவே இருந்து குஷியுடன் வேடிக்கையாய் ஓடி விளையாடமாட்டோமா என்று ஆசையாய் இருக்கிறதம்மா.''

''போ போ நீ ஓடினால் அதுவும் வேடிக்கையாய்தான் இருக்கும். அந்த குஷியில் ஒரு புதிய கதையும் உதிக்கும்'' என்றவள் தன் மகனின் மகிழ்ச்சியைக் கண்டு பூரித்து பூத்துபோனாள்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலால் தற்பொழுது ஸ்திரீக்கு புருஷனுடன் ஸமான உரிமைகள் விவாக தாயபாக விஷயங்களில் கொடுக்கப்பட்டதென்றால் அவர்களுக்கவை புராதனகாலத்திலிருந்த உரிமைகளே.

ஆனால், ஒரு முக்கியமான விஷயத்தில் இப்போதிய சட்டங்கள் ஒரு பெரிய மாறுதலை அடிப்படையாக கைப்பற்றிற்று. விவாக விஷயத்தில் அம்மாறுதல் விவாகமென்பது கேவல ஒரு ஒப்பந்தம் (கான்டிராக்ட்டு)தான்: அது வேத சம்பந்தமான வைதிக கிரியை அல்ல. ஆதலால் விவாகம் ரத்து செய்தால், புனர் விவாகம் செய்து கொள்ளுதல் முதலான உரிமைகளெல்லாம் விவாகத்தின் அடிப்படையான பிராசீன தத்துவ மாறுதலால் உண்டானவை.

நக்ஷத்ர மண்டலம்

பி. தனம்

சினிமா உலகத்தின் சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தீர்களேயானால், சமீபத்தில்—அடாடா! என் பேனா இந்த இதழில் புதிய நடை போடுகின்றதே! ஒரு சமயம் பின்னால் வரையப்பட்டுள்ள கட்டுரையை முன்னால் நான் படித்துவிட்டதன் விளைவோ—பல சகோதரிகள் சினிமாவில் பிரவேசித்து நடிகைகளாக மாறி நிலையான புகழ் பெற்றிருப்பதை அறிவீர்கள். அந்த சகோதரிகளுடன், மூன்று எழுத்துகளை பெயர்களாகக் கொண்டவர்களும், கொயம்பத்தூரை சொந்த ஊராகக் கொண்டவர்களுமான ஒரு புதிய சகோதரிகள் சேர்ந்து எண்ணிக்கையை ஏற்றுகின்றார்கள். அவர்கள் யாரெனில் தனம் அவர்களும், அவருடைய சகோதரி சுசீலா அவர்களும்தான். தூணெனத்தாங்கும் தந்தை, அன்புடன் அரவணைக்கும் அன்னை, வம்புச்சண்டைக்கு இழுத்து வேடிக்கை செய்வதற்கும், அருமையாக 'வாலு' என்று அழைப்பதற்கும் ஒரு தம்பி, உள்ளத்துடன் உறவாட ஒரு தோழி ஸ்தானத்திற்கும், துணையாக தாங்கி நிற்பதற்கும் ஒரு தங்கை, இவர்களுடன் நான் சேர்ந்துதான் எங்கள் குடும்பம் என்கிறார் நமது தனம் அவர்கள். இவரிடமிருந்து கட்டுரை கிளம்புவதற்குள் எனக்கு புதியதொரு அனுபவமாக காலம் பெயர்ந்ததே அன்றி காரியம் சுலபமாக சித்திக்கவில்லை. பாவம்! இவருக்கு எவ்வளவு பட ஒப்பந்தங்கள். ஆனால் கட்டுரையை படித்தவுடன் இத்தனை சிறப்பு வாய்ந்த கட்டுரைக்கு எத்தனை நடை நடந்தாலும் போதாது என்றே எண்ணினேன். கட்டுரையில் காலத்தையும், கலையையும் ஒப்பிட்டு விளக்கி இருக்கிறார். அரசியலையும் அழைத்திருக்கிறார். தமிழ் என்னும் தேனை தெளித்திருக்கிறார். காமிராவின் எதிரில் வாழ்க்கையின் கோணங்களை சித்தரித்துக் காட்டும் கலையை பயிலும் இவர் பேனாவின் முனையினாலே உணர்ச்சிகளை கொட்டுவதிலும் வல்லவராகி, எங்களைப் போன்ற 'ஏதோ' எழுதுகிறவர்களை எதிர்த்து போட்டியிட ஆரம்பித்துவிடப் போகின்றாரே என்னும் பயம் இவர் கட்டுரையை படித்தவுடன் என் மனதில் எழுந்தது. விரைவில் இவரை கலை உலகத்தின் சிறந்த தனங்களுள் ஒன்றாக கருதப்படும் காலம் வந்தாலும் வரலாம்.

—சாரக்ராகி.

காலமும் கலையும்

காலம் மாறிக்கொண்டே வருகிறது. மாற்றங்கள் தாமாகவே ஏற்படுகின்றன. அவையாருடைய அநுமதியையும் கேட்டுக் கொண்டு வருவதில்லை. இது வரலாறு கற்றறிந்தோர் ஏகோபித்து ஒப்புக்கொண்ட முடிவு. அதைப்போலவேதான், கலையும் அதன் தோற்றுவாயிலிருந்து, இன்றுவரை காலத்தின் மாறுதலுக்கேற்ப மாறிக்கொண்டே வந்திருக்கிறது. இன்னும் மாறுதலடைந்து கொண்டே செல்லும் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

மனித இனத்தின் அறிவு முதிர்ச்சியை ஒட்டியே இந்த மாறுதல் ஏற்படுகிறது. ஆயினும், நேற்றுச் சுறுசுறுப்புடனும், நல்ல தெம்புடனும், காணப்பட்டவன், இன்று சோம்பிச்சுணங்கித் தளர்வெய்திக் காணப் படுவதுபோலவே, கலையின் நிலையும், ஒரு காலத்தில் மலர்ச்சிபெற்றும், ஒரு காலத்தில் வாடி வதங்கியும் வந்திருக்கிறது. தாழ்வுற்றுத்தவிப்பவன், திடீரென, வாழ்வு பெறுவதைப்போல், இடையிலே சீந்துவாரற்றுக்கிடந்த கலை, மீண்டும் புது வாழ்வு பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்க ஆரம்பிக்கிறது.

எத்தனையோ எதிர்ப்புகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகியும், "நித்தமோர் கண்டமும் நீடித்த ஆயுளும்" என்றபழமொழிக்கேற்ப, அழியாத கலையாகப் பரிணமிப்பது ஏன் தெரியுமா? அழிந்து போகும் கலைஞன், தான் அழிந்தாலும் தன்னோடு வளர்ந்த கலை அழியக்கூடாது என்ற ஆசையால், அதற்கு அடிக்கடி காயகல்பம் கொடுத்து, "அழியாமல் வளர்க" என்று வாழ்த்திவிட்டுச் சாகிறானே? ஏன் தெரியுமா? இதற்குக் கிடைக்கும் ஒரே விடை, "கலை, மனித வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது." என்பதுதான்.

ஆதி மனிதன், காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன், வயிற்றுப்பசி தீரக் காய்கனிகளையும் கிழங்குகளையும் தின்றான். காய்கள் கனிகளாக மாறும் பருவத்தில், அவனுக்குக் குதூகலம் பிறந்தது! வாய் இனித்தது! நாவின் ருசியும், கனியிலே கனிந்த சாற்றின் இன்பபோதையும், அவனைக் கூத்தாட வைத்தது. பச்சைக் கிழங்கையே தின்றுவந்தவன், அதைச் சுட்டுச் சுவையாகத் தின்ன, நெருப்பைக் கண்டுபிடித்தபோது, மட்டற்ற மகிழ்ச்சியால் நெருப்பைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து கூத்தாடினான். இரவெல்லாம் மரக்கிளையிலும் இருட்குகையிலும் அயர்ந்து உறங்கிக் கிடந்தவன், உதய சூரியனைக் கண்டதும் கடவுளெனக் கருதிக் கும்பிட்டுக் கூத்தாடினான். இவ்வாறாகக் குதூகலம் ஏற்பட்டபோதெல்லாம், ஆணும் பெண்ணுமாகக்கூடி, ஆடி, அகமகிழ்ந்து, அந்த நல்வேளையைக்கொண்டாடினார்கள் அப்போதெல்லாம் அவர்கள் ஆடிய கூத்துக்குத் தாளம் இல்லை. அவர்கள் மகிழ்ச்சி வெறியிலே போட்ட கூச்சலுக்கு ராகம் இல்லை.

காலம் மாறியது, தாளமும், ராகமும், பாவமும் அந்த ஆட்டத்திற்கு இலக்கணமாயின. ஆணும் பெண்ணும் தங்கள் துன்பத்தை மறந்து, இன்பத்திலே திளைத்திருப்பதாக, அவர்கள்



போட்ட ஆட்டத்திற்குப் பெயர்தான், "கூத்து", இதுதான் கூத்துப் பிறந்த கதை.

படிப்படியாக வளர்ச்சி பெற்றுவந்த இந்த இன்பக்கூத்து, இயலும் இசையும் கலந்த "நாடகம்" என்ற பெயரில் நடமாடத் தொடங்கியது.

பேசும் படமாகிய 'சினிமா' கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னுல், நமது தமிழகத்தில் இந்த நாடகக் கலையையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கருதி, அதை வளர்க்கப் பலர் புறப் பட்டார்கள். மேடையிலே அவர்கள் தோன்றி ஆடிப்பாடி நடித்தபோது, பார்த்தவர்கள் பரவசமடைந்தார்கள். ரஸித் தார்கள்; பாராட்டினுர்கள். ஆனுல், வீடு திரும்பியதும், "என்ன இருந்தாலும், இது என்ன பிழைப்பு? கூத்தாடிப் பிழைப்பு!" என்று மிகவும் கேவலமாகப் பேசத்தலைப்பட்டார்கள். குறைந்தது மூன்று மணி நேரமாவது இவர்களுடைய துன்பத்தை மறக்கச் செய்யும், மாமருந்தாகமாறி, வாய்விட்டுச் சிரிக்கவைத்துச் சிந்திக்க வைத்துப் புதியதோர் உணர்ச்சியை ஊட்டிப் புத்துயிர் தந்த கலைஞர்களல்லவா? அந்த நாடகமாடிகள்! அவர்களுக்கு வாழ்த் துக் கூருவிட்டாலும், தாழ்வாகப் பேசி அவமதிக்காமலாவது இருக்கலாமல்லவா? என்னே மனித உள்ளத்தின் நன்றிகெட்ட சுபாவம்?

நாடகம் 'சினிமா'வாக மாறியபோதும், அதில் பங்கெடுத்துக் கொண்ட கலைஞர் கூட்டத்தை, இந்தச் சமுதாயம் அதே கண் கொண்டுதான் பார்த்தது! நேரிலே பார்க்கும்போது வீண் புகழ்ச்சி, மலர்மாலே! பூச்செண்டு! வரவேற்புப்பத்திரம்! வாழ்த்துப்

பத்திரம்! கண் மறைந்தால்போதும்! அப்பப்ப! அவர்கள் ஏசி, ஏளனமாகப் பேசுவதைக் கற்பனைச் செவிக்கொண்டுகூடக் கேட்க முடியாது. சகிக்கவும் முடியாது.

கல்வியறிவும், உலக அறிவும், இல்லாதவர்கள்தான் அறியாமையால் தவறாக நினைத்துத் தப்புக் கணக்குப் போட்டார்களென்றால், நாலும் தெரிந்தவர்கள், நன்கு கற்றறிந்த மேதைகள் கூட, அவர்களையே பின்பற்றிப் பேசிவந்தார்கள். கலைக்கல்லூரியிலே படித்துத் தேறி பி.ஏ., எம். ஏ. பட்டம் பெற்றவர்களென்று மட்டும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். 'கூத்தாடிகள், நாடாள முடியுமா?' என்று சில நாட்களுக்கு முன்பு ஒரே மூச்சாகப் பேசித்தீர்த்தார்களாம்! நான் அவர்களைத் திருப்பிக்கேட்கிறேன்! 'ஐயா! பெரியவர்களே! பெரிய பட்டதாரிகளே! சங்க நூல்களைக் கொஞ்சம் புரட்டிப்பாருங்கள். நேரம் கிடைக்காவிட்டால், படித்தவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். சேரமான் ஆட்டனத்தி ஆடற்கலையின் ஆழத்தைக் கண்டவன். அவனுடைய நாட்களில் அவனுக்கு ஈடாக ஆடற்கலை தெரிந்தவர்கள் யாருமே இல்லையாம்! அவன் வெறும் நாட்டிய மன்னன் மாத்திரமல்ல; நாட்டின் மன்னனுங்கூட. சேர மண்டலத்தின் மணிமுடிவேந்தன். ஐயா! அவன்! அவ்வளவு தூரம் போவானேன்? உங்கள் கணக்குத் தப்புக் கணக்கு என்பதைத்தான் சமீபத்திய தேர்தல் நிரூபித்துவிட்டதே? நாடகக் கலைஞர்கள் நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாடாளவந்துவிட்டார்கள்! காலம் எப்படிமாறிவிட்டது? அன்று தூற்றியவர்களுங்கூட இன்று போற்றிப்புகழ ஆரம்பித்துவிட்டார்கள்! மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு, விஞ்ஞானமும் கலையுந்தான் அவசியமான தேவைகள்; கலையும் விஞ்ஞானமுமே மனித இனத்தின் இருகண்கள் என, உலகப்பேரறிஞர்கள், அரசியல் மேதைகள், ஆழ்ந்த சிந்தனையாளர்கள், அத்தனைபேரும் உணர்ந்து ஒப்புக்கொண்டுவிட்டார்கள்! ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல, மஹாசக்தியான கலை வளரட்டும்! வாழட்டும்! என வாழ்த்துகிறேன்.

சங்கன்: இன்று 2ரூபாய் நஷ்டம் ஐயா

சிங்கன்: ஐயயோ. எங்கயாவது தவறிவிட்டதா?

சங்கன்: தவறினால் நிம்மதியாச்சே! 2ரூபாய் சில்லறை கேட்டா நயா பைசா கொடுத்து எண்ணிக் கோணுடான். சித்தே எண்ணுங்களேன்.

சிங்கன்: ....?

"சித்தி!... ஐயோ வாயிலிருந்து ரத்தம்...மயக்கமா?... என்னால் இந்த கோலத்தைக் காணமுடியவேயில்லை. எனக்கும் மயக்கம் வந்துவிடும் போலிருக்கிறது. ஒரு மனிதன் இப்படி இரண்டு மூன்று தடவை மயக்கமானால் உடம்பு என்ன ஆகும் எனக்கு பயமாயிருக்கிறது" என்று முகத்தை மூடிக்கொண்டு 'என்ன செய்வது' என்று புருவத்தை நெறித்தாள்.

லக்ஷ்மி, வாஸு இருவரும் ப்ரமையாலும், அதிர்ச்சியாலும் தாக்குண்டு சோகப் பதுமைகளாய் காட்சியளித்தனர். எல்லோரையும் முத்துவின் நிலை கல்லாக்கிவிட்டிருந்தாலும், சரோஜா ஒருத்திதான் அக்கல்லிலிருந்து தன் மனதை மீட்டுக்கொண்டாள். அவள் மூளை சுறு சுறுவென வேகமாக வேலை செய்தது. தன் சிறு மூளையின் கட்டளைப்படி எங்கோ ஓட ஆரம்பித்தாள்—இல்லை இறக்கை இருந்தால் பறந்திருப்பாள்.

"தாத்தா"...என்ற அலறலோடு சதாசிவத்தின்மேல் ஓடி விழுந்தாள்.

"என்னம்மா! இப்படி கத்துகிறாய்? எதற்கு இந்த நேரத்தில் தனிமையாய் வந்தாய்? முத்துவை அழைத்து வருவதுதானே?"

"உம்....முத்துவா...தாத்தா.... அவசரம்....ஓடிவாங்கோ தாத்தா!...முத்து...முத்து...வாய்....ரத்தம்...அடி...பாட்டி.... பயம்...நீங்களும் ..வாங்..." அதற்குமேல் அவளால் பேச முடியாது துக்கமும், பயமும் நெஞ்சை அடைத்தன.

விஷயம் முழுவதும் சரியாகப் புரியாவிட்டாலும் 'முத்து ...ரத்தம்' என்றசொற்களிலிருந்து ஏதோ விபரீதம் என்று அறிந்து கொண்ட பார்வதி சிலையாய் நின்றிருக்கும் சதாசிவத்தின் கைகளைப் பற்றி இழுத்தவாறு, "ஹும்....புறப்படுங்கள்.... ஐயோ வாருங்களேன் .. சீக்கிரம்" என்று தானும் விறு விறு வென்று நடந்தாள்.

"ஆமாம் தாத்தா....வாருங்கள். முத்து ... இல்லை.... முத்து...மூச்சு பேச்சில்லாமல் கிடக்கிறான். ரகுதான்... கன்னத்தில்....அடித்துவிட்டு கம்பி நீட்டிவிட்டான். வாயிலிருந்து ரத்தம் வழிகிறது"—என்று அச் சின்னஞ் சிறு பிஞ்சு தட்டுத் தடுமாறி ஒருவாறாக நடந்ததைக் கூறினாள்.

மூவரும் ஓட்டமும் நடையுமாக 'ஆனந்த பவனத்தை' அடைந்தனர். முத்துவின் நிலைக் கண்டு துடிதுடித்துப் போயினர். எப்போது எப்படியிருந்தாலும் ஆபத்து சமயத்தில் லக்ஷ்மியின் கண்களுக்கு இவர்கள் தெய்வம்போல் காணப்பட்டனர் போலும், சாஷ்டாங்கமாய் 'தடால்' என்று அத்தம்பதிகள் காலில் விழுந்தாள்.

"வந்தீர்களா...நீங்களே கதி...கை கொடுத்து காப்பாற்றுங்கள். முத்துவை இந்நிலைக்குள்ளாக்கியவன், இந்த அபாக்கியவதியின் வயிற்றில் பிறந்த ராக்ஷஸன்தான்... அந்த ரகுவேதான். நிஜம்....பொய்யில்லை. அந்த கொலை பாதகன்தான். அவனை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். கௌரவம் பறிபோகாது, தெய்வம்போல் வந்த நீங்கள் காக்கவேண்டும். குழந்தை சரோஜாவிற்கு இருக்கும் சாதுர்யமும், புத்தியுங்கூட அந்த பாவிக்கு இல்லாது மழுங்கிவிட்டது. நான் என்ன செய்வேன்...." என்று முடுக்கிய இயந்திரம்போல் உணர்ச்சிமயமான சொற்களைக் கொட்டிக் குமித்தாள்.

"எழுந்திரம்மா லக்ஷ்மீ! நாங்களா தெய்வம்....ஷண்முகம்தான் தெய்வமாயிருந்து இக்குடும்பத்தை சீரழியாது காக்கவேண்டும். உன் துடி துடிப்பு எல்லாம் எனக்கு'டிகிரி' வைத்து பார்ப்பதுபோல் நன்றாகத்தெரிகிறது முதலில் முத்துவைக் கவனிப்போம்" என்றவாறே மேலே நடக்க வேண்டியனவற்றைக் கவனித்தார்.

ஒருவருக்குக் கடுமையான நோயோ,பெரும் ஆபத்தோ ஏற்பட்டு விட்டால் அவரை வெறுத்து ஒதுக்கும் நபர்களுக்கும் கூட, அந்த சமயத்தில் தம்மையறியாது அவரிடம் ஒருவித பாசமும் அத்தாக்குதலினால் ஒரு பதைபதைப்பும் ஏற்பட்டு அவர்களை பம்பரமாய் சுழலவைத்துவிடும். அம்முறையில் ரேவதியை முத்துவின் நிலை கலக்கிக் கல் நெஞ்சைக் கரைத்து, அவளைத் தெளிவிக்க இங்கும் அங்கும் ஓடி பல காரியங்களை செய்ய வைத்துவிட்டது. ஏற்கனவே உள்ள உளைச்சலோடு இந்த அலுப்பும் சேர்ந்து, அவள் உருவத்தை ஒரு நோயாளி போலாக்கிவிட்டது. வாடி வதங்கி அல்லலுற்ற கொடியைப் போல அங்கு வந்து நின்றாள்.

"ரேவதிதான் இருக்கிறாளே. என்ன கவலை? எட்டு ஊரை ஜெயித்து விடுவாள்" என்று சற்று ஏளன தொனியில் கூறிவிட்டு முத்துவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார் சதாசிவம்.

"தாத்தா! என்ன....எப்படி இருக்கிறது முத்துவின் நிலை? கவலைக்கிடமா ?"—என்ற பதத்தை வெளிப்படுத்தி விட்டது ரேவதியின் வாய்.

உள்ளுக்குள்ளேயே 'ஏதடா நடிப்பா இது. அல்லது நல்ல காலம்தான் பிறந்துவிட்டதா. நம்மை ஏறெடுத்தும் பார்க்காதவள், அதுவும் முத்துவைப் பற்றி அடக்கமாகக் கேட்கிறாளே' என்று சதாசிவம் எண்ணினாலும் "ஹூம். நான் என்ன சொல்ல முடியும். கடவுள் சித்தம்" என்று வெட்டித் தெறித்தாற்போல் கச்சிதமாகப் பேசிவிட்டு, முத்துவோடு புறப்பட்டார்.

கார் சென்று மறையும்வரை வாயிலிலேயே நின்றிருந்தனர். லக்ஷ்மியின் கால்கள் நிற்கக்கூட முடியாது கிடுகிடென்று ஆடியது. இந்த இக்கட்டான நிலையில் சரோஜாவின் சமயோசித புத்தியை நினைத்து ஒருபுறம் அவள் உள்ளம் மகிழ்ந்ததே தவிர, முத்துவின் கதி என்ன ஆகுமோ? நம் குடும்பம் எந்த சுழலில் அகப்பட்டு சொருகி விடப்போகிறதோ? என்ற பல அம்புகளாய் துளைத்துக் கொண்டிருந்தன.

ஆண்டவனின் அடிகளைதான் அடைக்கலமாக எண்ணி அண்டி பிடித்துக்கொண்டாள் லக்ஷ்மி.

அத்தியாயம்—13.

ஆத்திர தீயில் ஊத்திய எண்ணை

'வாப்பா உள்ளே! ஏன் தயங்குகிறாய்' என்ற அழைப்பைத் தொடர்ந்து ஒரு எளியமனிதன், "ஐயா இந்தக் கடுதாசியைக் கொடுக்கச் சொன்னாரு" என்று விளித்தவாறு ஒருகாகிதத்தை லக்ஷ்மியிடம் கொடுத்து நின்றான்.

"நேற்றிலிருந்து நானும் ஏதாவது சமாசாரம் தெரியுமோ என்று வழிமேலேயே விழிவைத்து கண்ணும் பூத்துவிட்டது".

"ஐயா வீட்டிலே நிக்கவே இல்லீங்க. அதனாலேதான் அலைச்சல்லே ஒண்ணும் சொல்லமுடியல்லீங்க. இப்ப கூட ஐயா ஆஸ்பத்திரியிலேதான் யிருக்காரு".

"ஓஹோ... அவரால்தான் எங்கள் மானம் பிழைத்தது" என்றவள், கடிதத்தின்மேல் கண்களை விட்டாள்.

"லக்ஷ்மிக்கு,

நான் இப்போது ஆஸ்பத்திரியிலிருந்துதான் கடிதம் எழுதுகிறேன். பொட்டில் அடி பலமாக பட்டுவிட்ட

தால் இப்போதுதான் சிறிது சிறிதாக தெளிவு ஏற்படுகிறது. மேலும் அடித்த வேகத்தில் இரண்டு பல் விழுந்து விட்டது, இரண்டு பல் உடைந்துபோயிருக்கிறதாம். அதெல்லாம் செப்டிக் ஆகாது இருக்க எத்தனையோ வைத்தியம் செய்திருக்கிறார்கள். அதிகமான ரத்தம் வெளியாகிவிடவே,பலஹீனமாய் இருக்கிறதாம். எல்லாவற்றிற்கும் ஒருவாரம் அங்கேயே இருக்கவேண்டும் என்றும் கூறிவிட்டார்கள். பிறகும் என் வீட்டில் அவனை குறைந்தது இருபது நாட்களாவது வைத்துக்கொண்டு அவன் தேர்ச்சி அடைந்ததும் அனுப்புகிறேன், எதற்கும் கவலையே வேண்டாம்.

அன்புள்ள,
சதாசிவம்''

"என்ன! இப்பொழுதுதான் தெளிவு ஏற்படுகிறதா? பல் கொட்டிவிட்டதா''... என்று தன்னையும் மீறி கத்திவிட்டாள் லக்ஷ்மி.

"ஆமாம்மா. நான் கூட பார்த்தேன். ரொம்ப கேவலமாய் இருக்காரு.... அப்போ வர்ரேங்க. பதில் ஏதாவது உண்டா?''

"ஒன்றுமில்லையப்பா....நீ போய் வா''

லக்ஷ்மிக்கு தன் நிலையே புரியவில்லை. அக்கடிதத்தையே வெறித்துப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள்.

மேஜைமேல் கடிதம் இருப்பதையும், லக்ஷ்மி பித்து பிடித்தவள்போல் அமர்ந்திருப்பதையும் தூரத்திலிருந்தே கவனித்த ரேவதி, அங்கு போகலாமா? வேண்டாமா? என்று யோசித்தபடி நின்றிருக்கையில் லக்ஷ்மியே அவளை கவனித்து விட்டதால், மெதுவாக அவ்விடத்தை அடைந்தாள். ஆனல் அவள் எதுவும் முதலில் பேசமுற்படவில்லை கடிதத்தை மட்டும் படித்துவிட்டு வைத்தாள்.

''ரேவதி! கடிதத்தைப் படித்தாயே. என்ன செய்யலாம் சொல். இப்படி அவன் படுத்திருக்கையில் நம் வீட்டிலிருந்து யாராவது போய் பார்க்கவேண்டும். அப்போது வள்ளியைப் பார்க்காது இருந்ததுபோல் இப்போது இருக்கக்கூடாது. நான் போகும் நிலையில் இல்லாது இருப்பதால் நீ போய் பார்த்துவிடடு வந்தால் நன்ருக இருக்கும். என்ன சொல்கிருய்?''

இதை எதிர்பார்க்காத ரேவதிக்கு இக்கேள்வி தாக்குதலையே அளித்தது. அதை பிறரறியாவண்ணம் அடக்கிக்கொண்டு, "சித்தி! நாம் இந்த சமயத்தில் போனேமானல், 'ஐயோ இவர்களால்தானே நமக்கு இந்த கதி ஏற்பட்டது' என்று ஆத்திரம் உண்டாகும். பலவீனமாக இருக்கும்போது இப்படிப்பட்ட உணர்ச்சிகள் மேலெழுந்தால் அது ஏதாவது ஆபத்தில் போய் முடியும் சித்தி. அதனல் சற்று

பொறுத்துப் பார்த்துக் கொள்ளலாம்" என்று அறுவாத கம்பி போல வார்த்தைகளைக் கோர்த்துத் தன் கருத்தை வெளியிட்டாள். பச்சோந்தி மனமுள்ள லக்ஷ்மிக்கு, 'இதுவும் சரியானதுதான்' என்று தோன்றியது.

ஆனால் ரேவதியின் உள்மனது எண்ணியது எவ்விதம்? 'என்ன இருந்தாலும் ஒரு வேலைக்காரனைப் பார்க்கப் போவதா? அவனுக்கு நம்மிடம் உள்ளமதிப்பே போய்விடும். நாம் மாறிவிட்டோம் என்று எண்ணி சித்தி கேட்கிறாள் போலிருக்கிறது. மிடுக்கையும் கைவிடக்கூடாது. இல்லாவிடில் நம் மனதுபடி ஒன்றும் நடக்காது. நல்லவேளை சமயத்திற்கு ஏதோ ஒன்று சாமர்த்தியமாகக் கூறிவிட்டோம்' என்று அவள் உள்ளம் அவளையே புகழ்ந்து பாராட்டி மாலை சூட்டியது.

பேசாது நின்றால் சித்தி ஏதாவது நினைத்துக் கொள்ளப்போகிறாளே என்று, "சித்தி! முத்துவை ஒரு வாரம் கழித்தும் அவர்களே வைத்துக்கொள்வதாய் எழுதியிருக்கிறார்களே அதற்கு என்ன சொன்னாய்?" என்று போலி அக்கரையுடன் விசாரித்தாள்.

"அதுவா ரேவதி! நான் ஒன்றும் சொல்லவில்லை. அந்த வேலைக்காரனிடம் எதற்கு இதை எல்லாம் சொல்வது? ஆனால் அவர் எழுதியிருப்பது சரிதான் என்று எனக்கேத் தோன்றுகிறது. இங்கு வந்தால் ரகுவின் கலாட்டாவில் மறுபடியும் ஏதாவது ஏடாகூடமாக ஆகிவிட்டால் என்ன செய்வது? ரகுவையும் காணோம் எங்கு தொலைந்தானோ."

"நீ அப்போதே பதில் சொல்லாததும் நன்மைக்குதான். நாம் உடனே 'சரி' என்று கூறிவிட்டிருந்தால் இவர்களுக்கு முத்துவை ஒழிப்பதில் எவ்வளவு அவசரம். நாம் கேட்பதற்கு முன் 'உம்' கூட்டிவிட்டார்கள்' என்ற தப்பு அபிப்பிராயமும் ஏற்படுமல்லவா?"

ஹூம். "இந்த முன் யோசனையெல்லாம் அப்போது எனக்கு தோன்றவில்லை. அதோ பார்! உன் சிநேகிதி வருகிறாள்"

"குட்மார்னிங் ரேவதி! இன்று வருகிறாயா கட்டாயமாக. ஹோட்டலில் டீ பார்ட்டி. பிக்சர் எல்லாம் நன்றாக இருக்கும்"—என்றவாறு உள்ளே வந்தாள் ஒரு காரிகை.

"சாந்தி! என்னால் எங்கும் வரமுடியாத நிலைமையில் இருக்கிறேன். என்மனதே சரியில்லை. ஒன்றுமே பிடிக்கவில்லை. மற்றொரு சமயம் தவறவே மாட்டேன். கோபிக்காதே" என்று அலுத்துக் கொண்டாள் ரேவதி.

"அப்படி என்ன ரேவதி கவலை மனது சரியில்லாமல்? ஓ 'ஸாரி'! உன் சொந்த விஷயத்தில் நான் குறுக்கிடுவது தவறு, சரி நான் வருகிறேன்" என்றவள் மறு நிமிடம் பறந்தாள்.

'நாம் நினைத்ததுபோல் ரேவதி மாறிதான்விட்டாள். இல்லாவிடில் போகவேண்டாம் என்று தடுத்து நிறுத்தியும், என்னை எகிறடித்துவிட்டு போகும் ரேவதி இப்போது ஏன் மறுக்கவேண்டும்! நாம் பாக்கியசாலிதான் இதுமட்டும்' என்று வியந்தாள் லக்ஷ்மி.

"இப்போது வந்தாளே இவள் மிக அழகாக நடனமாடுவாள். எங்கள் க்ளப்பில் இவள்தான் ஆடினுள். ஒரு நாள் நம் வீட்டில் ஆட வைக்கலாம்" என்றவாறு தன் அறைக்குச் சென்றுவிட்டாள் ரேவதி.

இத்தனை நாள் ஆகியும் இந்த ரகுவைக் காணவில்லை. எங்கு ஓடிவிட்டானே. நான் அப்படி ஒன்றும் அவனைக் கொடூரமாகப் பேசவில்லையே, ஹூம்....இதுவும் ஒரு சோதனைதான். எந்த இடத்திற்கு போயிருப்பான் என்ற வேதனை வேறு லக்ஷ்மியின் குடலை குலுக்கி எடுத்தது.

அப்போதுதான் வாஸு அந்த செய்தியை வெளியிட்டான்.

'அம்மா அன்று ரகுபோகும்போது 'நான்என் சினேகிதன் வீட்டிற்குப் போகிறேன். வர ஒருவாரத்திற்கு மேலாகும் என்று உன் அம்மாவிடம் சொல்' என்று கூறிவிட்டு போனுன். 'என் அம்மா என்ன? உனக்கும் தானே அம்மா. நீயே சொல்வது தானே' என்றதற்கு 'என் அம்மா இல்லையடா அவள், என் தாயார் என்னைப்போல் தைரியசாலியாக, புத்திசாலியாக இருப்பாள். இவளா, தூ....தூ என்று கத்தி விட்டு போய்விட்டான்."

"வாஸு ஏன் இத்தனை நாள் சொல்லவில்லை, எப்போதும் உனக்கு மறதிதான்"

"மறதி இல்லை. முத்துவைப் பற்றி கவலையாக இருக்கையில், இதையும் சொன்னுல்....என்ன ஆகுமோ என்றுதான் ......சொல்லவில்லை என்ருன்.

ரகுவும் வீட்டிலில்லாது, ரேவதியும் அடங்கியிருப்பதால் நேரமும் நாளும் போவதே தெரியாது பறந்துகொண்டிருந்தன.

'அப்பாடா! எங்கு வள்ளியின் குழந்தையை கொலை செய்தது போல் இதுவும் ஏறுமாருக நடந்து விடுமோ என்று நடுங்கி கொண்டிருந்தேன். அதுமட்டும் முத்து ஒரு மனிதனுகி வீடுவந்து சேர்ந்தானே, அதுவே போதும்?'

என்று நிம்மதியான பெருமூச்சை பாய்ச்சியது லக்ஷ்மியின் உள்ளம். அவள்சிந்தனை எங்கெங்கோ ஊடுருவிச் சென்று கொண்டிருந்தது.

"அம்மா! போஸ்ட்" என்ற குரல்தான் அவளைத் தட்டி எழுப்பியது.

ஒரே ஒரு கவர்தான்! ஆனல் அவ்வொன்றுதான் அவள் உள்ளக்கிடக்கைகளை பூர்த்தி செய்வதாய், மனப் புண்ணுக்கு மருந்தாய், ஆத்மாவிற்கு ஆறுதலாய் தோன்றி அவளை இன்பத்தில் திளைக்கவைத்தது.

●○●

"அன்புமிக்க சித்திக்கு,

அநேக நமஸ்காரம். இவ்விடம் நான் சௌகரியமாய் வந்து சேர்ந்தது பற்றிய தந்தி கிடைத்திருக்குமென எண்ணுகிறேன். என் கூடப் பிறந்த தங்கைகள், தம்பிகள் எல்லோரையும் விட்டு இங்கு தனித்து இருப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ வந்துவிடுகிறேன். நல்ல நிலையில், கௌரவமாக, கண்ணியத்துடன் வாழ்ந்து குடும்பத்தைத் தாங்கவே, இத்தனை தூரம் படிக்க வந்தேன். மேலும் அப்பா இருக்கும்போதே ஆவலோடு ஏற்பாடு செய்து, பல கோட்டைகள் கட்டினர். அவர் உடல் மறைந்துவிட்டாலும், அவர் உயிர் நம் நலனையே கோரி அலைந்து கொண்டிருக்கும். அதனல் அவர் கோட்டைகள் இடியாது உறுதிபெற்று, ப்ரகாசிக்கவே நான் கடல் கடந்து வந்தேன். உங்களைப் பிரிந்த வருத்தம் இருந்தாலும், சதாசிவ தாத்தா அவர்களின் செல்வாக்கால், உதவியால், வெகு சந்தோஷத்துடன் இருக்கிறேன்.

அங்கு எல்லோரும் நன்ருக இருப்பீர்கள் என நம்பி மகிழ்ச்சி அடைகிறேன். ரகு எப்படி இருக்கிருன். முரட்டுதனமெல்லாம் அடங்கி இருக்கிறதா? அவனை நன்ருகப் படிக்கச் சொல்லுங்கள். பெரிய படிப்பு படிக்கவைத்து அவனை தடபுடலாக இருக்கச்செய்ய வேண்டும் என்று நான் ஆகாச பவனங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறேன்.

ரேவதியின் பொறுப்பை உங்களிடம் கொடுத்து, நான் கவலையை விட்டுவிட்டேன் சித்தி! நான் இருக்கும் போது அவளை மிரட்டி, அடக்கி வைத்திருந்தேன். இப்போது உங்கள் பேச்சை மீறி கெட்ட வழியில் போகாது, நீங்கள் அடக்கவேண்டும். நானும் அவளுக்குக் கடிதம் எழுதுகிறேன்.

வள்ளிக்குக் குழந்தை பிறந்துவிட்டதா? ஆணு? பெண்ணு? முத்து எல்லோரும் சௌக்கியமா? சரோஜா,

வாஸுை, இருவருடைய ஞாபகமாகவே இருக்கிறது. ப்ரத்யேகமாய் அவர்களை விசாரித்தேன் என்று சொல்லுங்கள். இங்கு எனக்கு சுதர்ஸன் என்றொரு நல்ல நண்பன் கிடைத்திருப்பது நான் செய்த அதிர்ஷ்டத்தால்தான். இங்கு காலேஜில் நடந்த சில தேர்வுகளில் நான் முதன்மையாக இருக்கிறேன். இது கேட்டால் நீங்கள் எல்லையில்லா மகிழ்ச்சி அடைவீர்கள். அப்பா, அம்மா அனுக்ரகத்தாலும், சதாசிவ தாத்தா, உங்கள் ஆசி இவற்றினாலும் எனக்கு வெற்றியே ஏற்படும். அமெரிக்கா எனக்கு அமிர்தமாக இருக்கிறது. என்னைப்பற்றி கவலையே வேண்டாம் சித்தி. நாட்கள் கொட்டைப்பாக்காய் உருண்டுவிடும். அடிக்கடி அங்கு நிகழும் சம்பவங்களை கடிதம் எழுதிக் கொண்டே இரு.

கோவிலின் தீபஸ்தம்பங்களுக்கு எண்ணை போய்க் கொண்டிருக்கிறதா? மறக்காது அனுப்புங்கள். உங்களுடைய பதிலை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

தங்கள் அன்புள்ள மகன்
ரஞ்சன்."

●○●

இக் கடிதத்தை லக்ஷ்மிக்கு எத்தனை தரம் படித்தாலும் அலுக்கவே இல்லை. 'ஹுூம் என்ன பாக்கியம் செய்து அந்த மாணிக்கத்தைப் பெற்றாளோ. எனக்கும் பிறந்திருக்கிறதே சத்ரு. வீட்டைவிட்டே ஓடி இன்னும் வந்தபாடில்லை. அந்த ஜடத்தை பெரிய நிலையில் கொண்டு வரவேண்டும் என்று எழுதியிருக்கிறான் ரஞ்சன். பாவம்', என்று அவள் மனம் எண்ணியது. மேலும் 'வள்ளியைப் பற்றி எழுதியிருக்கிறானே அதை எப்படி தெரிவிப்பது? என் மனதிலுள்ள கஷ்டங்களை, இந்த வீட்டில் நடந்த அமளிகளை எல்லாம் ஒன்று விடாது கதை போல் எழுதி போட்டு விடலாம். என் குறைகளை ஒருவரோடு பகிர்ந்து கொண்டால் தான் குறையும் அப்படியே செய்யலாம். ஆனால்....என் கஷ்டம் குறையும், ரஞ்சனுக்கு, படிப்பிற்காக போயிருப்பவனை அங்கும் நிம்மதியாக இருக்கவிடாது செய்யவேண்டாம். என்னால் அவனுக்கு நன்மை இல்லாவிட்டாலும், தீமையாவது இல்லாது இருக்கட்டும், ரஞ்சன் ஊர் திரும்பினால்தான் எனக்கு நிம்மதி' என்ற முடிவை கடைசியாக நிர்ணயித்துக் கொண்டாள்.

அதே சமயம் ஆற துவங்கியிருக்கும் புண்ணைக் கிளற ராஜு அங்கு வந்தான். அவனைக் கண்ணுற்ற லக்ஷ்மியின் கண்கள் கனலைத்தெரித்தன. அவனை ஏறெடுத்துப் பார்க்க விரும்பாத வெறுப்பு லக்ஷ்மியிடம் வளர்ந்திருந்ததால் அவள் கடிதத்தையும் மறந்து உள்ளே போனாள்.

அவள் போவதையே ஏளனமாகப் பார்த்துக் கொண்டிருந்த ரகு காற்றில் படபடக்கும் கடிதத்தை பிரித்து விஷயம் அறிந்தாள்.

"ஹூம்....பேசாது போகிறாளே. போகட்டும் நன்றாக போகட்டும். நான் என்ன குறைந்துவிட்டேன். நான் ஆண் சிங்கம். நானா பேசுவேன். தானாகவே சிறிது நேரம் கழித்து வந்து 'டேய் ரகு! வாடா!'' என்று குழையும் என்று மார்தட்டிபேசினான்.

'தனக்கும் தெரியவில்லை, சொன்னாலும் தெரியவில்லை. அம்மாவிடம் யாரால் முட்டிக்கொள்ள முடியும்? இந்த ரஞ்சன் என்னைப்பற்றிரொம்ப அக்கறை உள்ளவனாகவும் குடும்பப் பொறுப்பு எல்லாம் உன்னுடையது தான் என்றும் அம்மாவிற்கு எழுதியிருக்கிறானே, அது போலி அக்கறையுடன் எழுதிய கடிதம் அல்லவா? ரகுவின் முரட்டுத்தனம் அடங்கியிருக்கிறதா? கொழுப்புக்... கேள்வி... சித்தியைப்பற்றி உயர்வாக எழுதினால்தான் அவள் மனம் பூரித்து தனக்கு பூரணமதிப்பு வைத்து விடுவாள். இந்த சந்தர்ப்பத்தில் நம் சொத்தில் பெரும் பகுதியை கறந்துகொள்ளலாம் என்ற முன் யோசனையுடன் எழுதிய வஞ்சகக் கடிதம். அதை இந்த பித்து உண்மை என நம்பி பிறந்த பிள்ளையையும் உதாசீனம் செய்துவிட்டு போகிறாள். அப்பாவி அசடு'' என்று தன் அம்மாவின் மூட தனத்தை எண்ணி நொந்தவாறே தன் அறைக்குள் காலெடுத்து வைத்தான்.

அதற்குள் விசில்களும் சினிமாப் பாட்டின் முணமுணப்பும், பூட்ஸ் ஒலிகளும் அவனை உள்ளே போகாது தடுத்தன. "மிஸ்டர் ரகு! எங்கள் வரவிற்காக காத்திருக்கிறாயா? சற்று நேரமாகிவிட்டது'' என்றவாறு அவன் நண்பர்கள் பீடிபுகை சூழ முன்னேறி வந்தனர்.

"நோ. நோ. நானே இப்போதுதான் வந்தேன். நம் ஆட்டத்தைத் துவக்கலாமா? உட்காருங்கள்'' என்று அறைக்குள் நண்பர்களோடு புகுந்தான். ஆட்டமும் தொடங்கியது. பீடிபுகை வீடுமுழுவதும் பரவிக் கொண்டே வந்தது. அவர்கள் சிரிப்பொலி தெருவே அதிரும்படி இருந்தது.

இதைக் கண்டு சகிக்காத சரோஜா, "அம்மா! ரகு அண்ணா இத்தனை நாள் கழித்து வந்திருக்கிறானே பார்த்தாயோ" என்று அம்மாவிடம் பேச்சைத் துவக்கிறாள்.

"போதும் அந்த சண்டாளனை நான் பார்க்காதது தான் குறை. வந்தால் கிடக்கட்டும்."

"என்னம்மா இது. உனக்கு விஷயம் தெரியாதா? ரகுவோடு அவன் நண்பர்கள் மூன்று நாலு பேரை அழைத்துவந்து அவன் அறையில் பீடி பிடித்துக்கொண்டு, சீட்டாடுகிறான். ஒரேக் கூச்சல் சகிக்கவில்லை" என்று சரோஜா கூறிமுடிக்கும் முன்பே, "என்ன? நண்பர்களோடா?....நம் வீட்டிலா?...." என்றவள் விடுவிடென்று ஓடினாள்.

"ஆம்! சரோஜா கூறியதுநிஜம்தான். இதோ ஆடுகிறார்களே பாவி!" என்றவாறு போனபோது அங்கு அவர்கள் வைத்திருந்த கூஜா, அவள் கால் பட்டு கீழே உருண்டது. ஓசைகேட்டு ரகு நிமிருவதற்குள், லக்ஷ்மியின் பயங்கர ஒலி அவனைத் தாக்கிற்று.

"ரகு! என்ன என்று நினைத்துக்கொண்டு இப்படி கொட்டம் அடிக்கிறாய். பீடி பிடிப்பதும் சீட்டாடுவதும்



ரொம்ப அழகாக, புகழத் தகும்படி இருக்கிறதே.; இத்தனை நாள் வெளியில் இருந்த ஆட்டங்கள் இப்போது வீட்டிற்குள்ளேயே ஆரம்பமாகிவிட்டதா? எந்த தைரியத்தில் இப்படியெல்லாம் செய்கிறாய்?"

"அம்மா உன்னை நான் இங்கு அழைத்தேனே? உன்னுடைய பித்துக்குளி தனத்தை எல்லாம் என் நண்பர்கள் முன் காட்டவேண்டாம். பேசாமல் போ. அநாவசியமாகக் கத்தாதே"

"ஓஹோ!......இவ்வளவு அலட்சியமா? ஆகட்டும் பார்க்கிறேன்" என்று கூவினாள். அவள் உடல் ஆத்திரத்தால் வியர்த்தது.

பலபேர் முன் தனக்கு ஏற்பட்ட அவமானத்தால் குன்றி வேறு பேச்சு பேசாமல் நேராக தன் அறைக்குப் போய்விட்டாள்.

"ரகு! எங்கள் அம்மாவும் இப்படிதான் ஒரு நிமிஷம் நிம்மதியாய் விளையாட விடமாட்டேன் என்கிறது. அதனால் இங்கு வந்தால் இங்கும் அதே கதைதானா? ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடாதுபோலிருக்கிறது"என்றான் ஒருவன். "வீட்டிற்கு வீடு வாசற்படிதானா? எனக்குதான் இந்த கஷ்டம் என்று நினைத்தேன்" இப்படிப் பேசிக் கொண்டனர்.

லக்ஷ்மி வந்து விட்டாளே தவிர சரோஜா விடுவாளா?

"முகத்தைப்பார், பெருச்சாளி மாதிரி...நண்பர்களாம். அம்மாவைவிட இந்த சோதாக்களை மதித்து அவமானமா படுத்தினாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்?"

"ஹு...என்ன செய்துவிடுவாய்? நான் ஒன்றும் உன்னை செய்யாமலிருந்தால் போதும். எப்பொழுதும் ஏதாவது உளறிக்கொண்டே இருக்கவேண்டியது. போ வெளியே' இல்லாவிடில் இதோ பார் ஜாட்டி. முதுகு பிய்ந்துவிடும்..

"டேய் ரகு! இந்த மிரட்டல்களுக்கு நான் மசியமாட்டேன், சின்னவள் என்று பயமுறுத்துகிறாயா? ஒன்றும் நடக்காது. கையால் அடிப்பதைவிட்டு, ஜாட்டியை உபயோகிக்க இன்று முகூர்த்தம் பார்த்திருக்கியா?"

"ஏய் சரோஜா...."

"என்ன..ஏய் சரோஜா? ஏயாமே....மாடா? குதிரையா? எனக்கு எப்போதும் உளறுவது வேலை. உனக்கு... அடிப்பது வேலை? வள்ளியை அடித்தாய். அவள் குழந்தை இறந்தது, என்னை அடித்து என் மண்டையை உடைத்தாய். முத்துவை அடித்து, அவன் பல்லையெல்லாம் உதிர்த்து கிழவனாக்கி விட்டாய்...."

"சரோஜா....பிய்த்து விடுவேன்....பிய்த்து......"

"ரகு! உன் தங்கை ஏதேதோ சொல்கிறாளே, என்னமோ குழந்தை இறந்ததாம். பல் உதிர்ந்ததாம் என்ன விஷயம் எங்களுக்குச் சொல்லவே இல்லையே"—என்று

அவன் நண்பர்களே குறுக்குக் கேள்விகள் போட்டு மடக்கினர். ரகுவிற்கு சரோஜாவின் பேரில் ஆத்திரம் கொந்தளித்தது. இந்த குழப்பத்தில் நண்பர்களுக்கு என்ன சொல்வது? ''ஒன்றுமில்லே. ஏதோ' மைனர் பாயின்ட்' இதெல்லாம்எதற்கு உங்களுக்கு? ஆட்டத்தை கவனியுங்கள் இது ஒரு லூஸ். நாங்கள் வீட்டில் லூஸ் என்றுதான் அழைப்போம்'' என்ருன். பிறகு சரோஜாவை சைகையால் உதைப்பேன் என்று மிரட்டினன்.

"டேய்! ஏன் சைகை? ஊமையா? நீ. என்னே இவ்வளவு தூரம் நடந்து வந்து அடிப்பதை விட, உன் அருகிலேயே இருக்கும்!அருமை நண்பர்களேயே உன் கை முத்தமிடட்டும். போடா போக்கிரி பயலே" என்றவள் ரகு கையை ஓங்கியவாறு ஓடி வருவதைக் கண்டு ஒரே ஓட்டம் எடுத்தாள். சரோஜா அவ்விடத்திலிருந்து விலகி விட்டதால், ஓங்கிய அவன் கைகள் கதவில்தான் மோதி வலியை உண்டாக்கியது.

நண்பர்கள் முன்பு தன் அசடு வழியும் முகத்தைக் காட்ட துணியாதுதானே தன் முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு, உள்ளம் ஒரு புறம் கொதிக்க, கருவிக்கொண்டே அமர்ந்தான்.

சரோஜா தன் அம்மாவிடம் ரகுவிற்கும் தனக்கும் நடந்த வாக்குவாதத்தைக் கூறிவிட்டு, "என்னம்மா அவ்வளவு திமிர் அவனுக்கு? உன்னே அவமானப் படுத்தியதோடல்லாமல், என்னே லூஸ் அது, இது என்று சொல்கிருன். நான் லூஸா அம்மா?'' என்று சிணுங்களோடு விம்மினுள்.

''சரோ! அழாதே. நான் சதாசிவத் தாத்தாவிடம் சொல்லி, அவனே அடக்குகிறேன். நீ இனி அவன் ஜோலிக்குப் போகாதே.முரடன் அவன். மண்டை காயப் பட்டதுபோருது கால்கையை உடைத்துவிடப் போகிருன்.'' என்று அணைத்தவாறு கூறினுள். அப்போது ஜன்னல் வழியாக என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்த ரகு 'ஓஹோ! புத்திமதி படலம் நடந்துகொண்டிருக்கிறது' என்று முணுமுணுத்தவாறு போய்விட்டான்.

"அம்மா! சதாசிவத் தாத்தாவிடம் சொல்கிறேன் என்கிருயே. அவரை இவன் அடக்கி வருகிருனே. நீ கொடுத்த இடம்தான் தலேக்கேறி இருக்கிறதே"

"சரோ! பெரியவர்கள் மாதிரி இப்படியெல்லாம் பேசக் கூடாது. நான் கவனித்துக் கொள்கிறேன். நீ போய் விளேயாடு" என்று,சரோஜாவை அனுப்பிவிட்டாள். லக்ஷ்மிக்கு ஒன்றும் புரியவில்லே. இதயம் இரும்பாக கனப்பதுபோல் ஒரு உணர்ச்சி ஏற்பட்டு அவள் நெஞ்சை அழுத்தியது.

குழப்பமே உருவாய் உட்கார்ந்திருக்கும் லக்ஷ்மி ரேவதி வருவதைக் கண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். கூடவே ஒரு பெருமூச்சும் சீறி வந்தது.

"ஏன் சித்தி! என்னவோ போல் இருக்கிறாய்? என்ன நடந்தது? ரகு வந்திருக்கிறான் போலிருக்கிறதே?"—என்றாள் ரேவதி.

"ஹூம் வந்திருக்கிறான் வந்தவுடனேயே அவனது கூத்தைத் தொடங்கிவிட்டான் என் தலைவிதி!"

"என்ன சித்தி! மறுபடியும் என்ன? சீக்கிரம் சொல்."

"அதோபார் கும்மாளம். கூச்சல் வருகிறதே. ரகுவின் அறையிலிருந்துதான் அது. அவன் தன் சகாக்களை அழைத்துவந்து சீட்டுக்கச்சேரி நடத்துகிறான். நான் அங்குபோய் கண்டித்ததற்கு, 'உன்னை நான் இங்கு வா என்று அழைத்தேனா? பேசாமல் போ' என்று அவர்கள் எதிரில் அவமானப் படுத்திவிட்டான். என் மனது எப்படி வேதனைப் படுகிறது தெரியுமா?"

நண்பர்கள் என்றதும் அவள் மனம் திடுக்கிட்டது. ஐயோ என்ன விபரீதம் ஏற்படுமோ என கலங்கினாள். இதற்கு ரேவதியால் நேராக பதில்கூற முடியவில்லை. 'இப்படியா சொன்னான்' என்று கேட்க தாமதம் ஏன்? தானும் இம்மாதிரி தன் சிநேகிதிகள் எதிரில்எத்தனையோமுறை அவமானப்படுத்தி யிருக்கிறாள் இல்லையா? அதனால் சிறிது யோசித்துவிட்டு, "அவன் எப்பவுமே அப்படிதான். நீ வருத்தப்படாதே சித்தி. நாம் என்ன செய்வது? சித்தீ! ஒரு முக்கியமான விஷயம். அதைக்கேட்டு நீ பயந்து விடாதே. அன்று ஒரு நாள் ரகு என்னிடம் ஏதேதோ உளறினான். அதைக் சொல்வதற்கே நா எழவில்லை. இன்று வந்தாளே 'சாந்தி' என்று ஒரு பெண். அவளை ரகுவிற்கு நான் சிபார்சு செய்து மணம் முடித்துவைக்க வேண்டுமாம். அவள்மீது ரொம்ப ஆசையாம். நான் அந்த உதவி அவனுக்கு செய்தால் அவன்...வந்து..." இப்படி கூறிவிட்டு சுற்றும் முற்றும் மிரள மிரள பார்த்தாள்.

இதைக் கண்ணுற்ற லக்ஷ்மி பதறியவாறு, "ஏன் நிறுத்திவிட்டுப் பார்க்கிறாய்? பயப்படாமல் சொல். நானிருக்கிறேன்" என்று ஊக்கினாள்.

"அவன்...அவன்.... சினேகிதனும், பெரிய பணக்காரனும், அவனை எனக்கு செய்துவைத்து விடுகிறானும். 'சினிமாவிற்கு வா. உன்னை சந்திக்க வைக்கிறேன்' என்றெல்லாம் கூறினான் சித்தி"

"ரேவதி! இவ்வளவு விபரீதமாகிவிட்டதா? இவனைத் திருத்துவது என்பது கனவுதான். என்ன செய்வேன். வீட்டில் தனக்குமேல் பெரியவர்கள் இருப்பது நினைவில்லை போலிருக்கிறதே. உனக்கு பிள்ளை தேட இவன் யார் ரேவதி? இவன் யார்? அக்காவிற்கு தம்பி பிள்ளை தேடுகிறானும். ரொம்ப நியாயம். இதையெல்லாம் இப்படியே விடக்கூடாது. கத்திரித்து புதைத்துவிட வேண்டும். கல்யாணம் என்ற பேச்சே ரஞ்சன் திரும்புகிற வரையில் எடுக்கக்

கூடாது. ஐயோ! என்னை ஏன் இப்படி சோதனை செய்கிறார் கடவுள்''

"சித்தி! நீ அலட்டிக் கொள்ளாதே. அவன் என்னவோ தத்துபித்தென்று உளறினான். நான் எதற்கும் பிடி கொடுக்காதே பேசினேன். ரஞ்சன் வருகிறவரையில் இந்தப் பேச்சுக்கே இடமில்லை என்றும் தீர்த்து சொல்லி விட்டேன். நான் அப்படிஎல்லாம் அவன் பேச்சைக்கேட்க மாட்டேன் சித்தி!

"ஆமாம் ரேவதி! நீ கலங்கவேக் கூடாது. நாட்கள் வேகமாகத்தான் ஓடுகின்றன. ஆனால் எனக்கு என்னவோ ஆமையாய் ஊறுவதுபோல் இருக்கிறது. எப்போது ரஞ்சன் வருவானோ?" என்றுகூறி கண்ணைமூடிக்கொண்டாள்.

அப்போது வாஸு, "ரேவதி! உன்னை ரகு கூப்பிடுகிறான் ஒரு முக்யமான விஷயத்தைப் பற்றி அசரமாகப் பேசவேண்டுமாம்'' என்று கூறிச் சென்றான்.

இதைக் கேட்டதும் லக்ஷ்மி, ரேவதி இருவரும் திணறினர். ரேவதியைத்தான் இந்த அழைப்பு அதிகமாகப் பாதித்து இடியவைத்து விட்டது. கை கால்கள் பதறி, வியர்வை முத்து முத்தாய் அரும்பி வழிந்தன.

"நான் பயந்தபடி ஏதோ விபரீதத்திற்கு தான் நண்பர்களை அழைத்து வந்திருக்கிறான். சித்தி! ஒரே நடுக்கமாய் இருக்கிறது. நீ மறைவிலிருந்து நாங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிரு. நான் போகிறேன்":என்றுகூறிவிட்டு ஒன்றும் அறியாதவள் போல் போனாள்.

"என்ன ரகு! கூப்பிட்டாயாமே. உன்னைப் பார்த்து நாளாகிவிட்டது''

"நீதான் படிதாண்டா பத்தினியாயிற்றே. சரி அந்த வெட்டிப் பேச்சு இப்போது எதற்கு? ஒரு முக்யமான விஷயம். அன்றொருநாள் உன்னிடம் சொன்னேனே நினைவிருக்கிறதா!''

''என்னிடமா? அன்றொரு நாளா?... என்ன புதிர் போடுகிறாய்....ஒன்றும் நினைவில்லையே. மறந்துவிட்டது''

"நல்ல மறதிதான் போ...."

"என் சிநேகிதன் பற்றி கூறினேனே. அதற்குத் தான் கூப்பிட்டேன்."

"உன் சிநேகிதனா? யார்...இரு யோசிக்கிறேன்... உம்.... ஆமாம். நினைவிற்கு வருகிறது. சரி அதற்கு இப்போது என்ன?''

"என்னவா? அந்தப் பையனை நண்பர்களோடு சீட்டு ஆட அழைத்துவந்தேன். இந்த சாக்கில் காரியத்தை

முடித்துவிடலாம். நம்மைவிட பத்து மடங்கு பணக்காரர்கள் ரேவதி!'

"இருக்கட்டும் ரகு! நான் அப்போதே சொல்லிவிட்டேனே. வீட்டில் பெரியவர்களுக்குத் தெரியாமல் ஒன்றும் செய்யக்கூடாது"

"தூ...ரேவதி நீ ரொம்ப கெட்டுபோய் விட்டாய். பெரியவர்களாம் பெரிச்சாளிகளாம். அதுவும் நம் வீட்டு பெருச்சாளி, ஒரு பத்தாம் பசலி. அது ஒரு காரியத்தையும் ஆகவிடாது. உன் நன்மைக்குச் சொன்னேன். நன்ருக யோசி"

"யோசித்தாய் விட்டது ரகு. என்ன முடிவுசெய்தாலும் ரஞ்சன் வந்த பிறகுதான் என் கல்யாணப் பேச்சு. அதுவும் சித்தி சொல்படிதான் நடக்கும்"

"ரஞ்சன் வரவேண்டுமா? அவன் திரும்பி வருகிருனே அல்லது..."

"சீ ரகு! ரொம்ப அத்துமீறி பேசாதே. அவனைப்பற்றி நீ சொல்ல வேண்டியது அநாவசியம்."

"ரொம்ப சரி. உன்னருமை சித்தியின் பேச்சைக் கேட்டு கெட்டுப்போ அம்மா! அந்த ஊஸின் போதனையால் நல்ல அதிர்ஷ்டத்தை உதறித் தள்ளு. நம் வரை நாம் சுகமாய் இருக்க வழி தேடாமல் உளறுகிறது ஊஸ். ரேவதீ!... வாக்கியம் முடிவடையவில்லை. அதற்குள் அங்கு நடந்த நிகழ்ச்சி!

மறைவிலிருந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த லக்ஷ்மியின் ரத்தம் நேரம் போகப் போகக் கொதித்து பொங்க ஆரம்பித்தது. 'ஊஸ்' என்ற சொல் காதில் விழுந்ததுமே அவள் நிலை விவரிக்கத் தகாததாக மாறி மறைவிடத்திலிருந்து பாய்ந்து வந்தாள். ரகுவின் கன்னத்தில் 'பளீர்' என்று அவள் கை தொட்டு நகர்ந்தது.

அங்கிருந்தவர்கள் எல்லோரும் திகைத்து அதிர்ச்சியில் அமிழ்ந்திருந்தார்கள். அந்நிலையிலிருந்து மீளுவதற்குள், "ஹஹ்ஹஆ...டேய் ரகு! ஊஸ் என்றுதானே சொன்னாய் ஊஸ் என்ன செய்யும்? என்னடா செய்யும்?...தெரியாது...இப்படிக் கூறிக்கொண்டே மற்ருெரு கன்னத்திலும் ஓங்கி அறைந்தாள். பிறகு "இப்படித்தான் செய்யும்... ஊஸுக்கு அடிக்கத்தானே தெரியும். எப்படியிருக்கிறது" ஊஸின் லீலை? என்ருள். [illegible] பேரொலியை விட பயங்கரமாக ஒலித்தது லக்ஷ்மியின் குரல்.

என்ன கொடியவனாக கல் நெஞ்சனாக இருந்தாலும் கன்னத்தில் விழுந்த அடியில் ரகுவும் ஸ்தம்பித்து, கன்னத்தைத் தடவியவாறு நின்றுவிட்டான்.

1837

வானமே இடிந்து தலையில் விழுந்ததுபோல் ப்ரமித்து திண்ணையோடு சுருண்டு விட்டேன். செத்த பிணமான என் மனைவியை நினைத்து சாகா பிணமாய் கிடந்தேனே தவிர ஆஸ் பத்திரிக்கு போகக் கூட உணர்ச்சி அற்றுவிட்டது. யார் சென்றார்களோ என்னவோ ஒருவழியாய் பிணம் வீடு வந்துசேர்ந்தது. என் துக்கம் பூராவும் கொட்டிக் கதறித் தீர்த்தேன். வீட்டில் பெண்கள், குழந்தைகள் வீதி இரண்டுபடும்படி அலறினார்கள்.

"கட்டுக்கவுத்தியாய் சென்றவள் மஞ்சள் பூசி குங்குமம் இடலாம்" என்று சொல்லியவாறு ஒரு பெரியம்மாள் பிணத்தின் முகத்தில் மூடி இருந்த துணியை விலக்கினாள். சற்றுக்கெல்லாம் "ஐயோ இது யாரு பிணம்... நம் நாகம்மாவா..." என்று வீறிட்டாள். உடனே குசமசவென்று பேச்சுக் குரலும் கலவரமும் சேர்ந்து வீட்டைக் குட்டைக் கலக்கியது. 15, 16 வயது மதிக்கக்கூடிய சிறு பெண் நிம்மதி உலகை அடைந்து ஆனந்த நித்திரை செய்து கொண்டிருந்தாள். "யார் வயறு துடிக்கிறதோ" என்று சொல்லியவாறு பிணத்தை வண்டியில் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரியை அடைந்தோம். "கந்தசாமி நீயே வா...சாவு கிடங்கில் உன் மனைவி பிணம் எங்கு இருக்குமோ நீ வந்தால்தான் சீக்கிரம் கண்டு பிடிக்கமுடியும்" என்று என்னையும் இழுத்துச் சென்றார்கள். "அட இழவே செத்த பாட்டில் இது பெரிய பாடாய் இருக்கிறதே" என்று கதறியவாறு ஆஸ்பத்திரி அடைந்தேன்.

அதிகாரிகளிடம் சென்று "பிணம் மாறிவிட்டது என்று சொல்லி எடுத்து வந்த பிணத்தை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு எங்கள் பிணத்தைத் தேடத் தொடங்கினோம். தேடித் தேடி எங்கள் பிணம் கிடைக்காது சோர்ந்து மரத்தடியில் வந்து உட்கார்ந்துவிட்டோம். இரவை ஒருவாறு கழித்து மறுபடியும் பிணக் கிடங்கை அடைந்தோம். மனது தாளாது ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்த என் தங்கை "அண்ணி இருந்த இடத்தையாவது பார்த்துவிட்டு வருகிறேன்" என்று அவளைவிட்டு இருந்த வார்டைப் பார்க்கப்போனாள், "நர்ஸம்மா...யாரும் வரவில்லையா... ஒரு வாய் காபி தண்ணி கொடுங்கம்மா...நாக்கு வறட்டுது" என்று கேட்கும் ஹீனக்குரலைக்கேட்டு ப்ரமித்து, கட்டிலருகில் சென்று பார்த்தாளாம் என் தங்கை. ஆச்சரியத்தால்கண்கள் அகலவிரிந்து "ஹா. அண்ணீ... அண்ணீ..." என்று தன்னை மறந்துகத்திவிட்டாளாம். ஒன்றும் புரியாத நோயாளி..."கண்ணூ! உயிர் இருக்கும் போதே இப்படி மறந்து விட்டீர்களே" என்று ஏக்கம், துக்கம் பாதிக்கக் கேட்டாளாம். பிறகு விவரிக்கவா வேண்டும்! தங்கை மூலம் விஷயம் அறிந்து ஆச்சர்யத்துடன் ஆஸ்பத்திரிக்கு எல்லோரும் ஓடிவந்தோம். எப்படி இருந்தது எங்கள் நாகம்மாவின் வைகுண்ட யாத்திரை? உலக விசித்திரத்தில் இதுவும் ஒன்று! ஒரே பெயராலும், ஏழ்மையாலும்தானே இத்தனை அல்லல்கள்!

—எஸ். என் கிரிஜா.

Jaganmohini (May 1957) Regd. No. M. 2210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்ர பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய மூரகு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா.12
பஷிமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

அணா 8.
உணர்த்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

வை. மு. பத்மினி

ரூ. 1 8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி
காந்தி கீர்த்தனம் 3-8

ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமீ
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.